கோகுலம்

GOKULAM


பிப்ரவரி 2001

ரூ. 6/-



செஸ் தோன்றியது எப்படி?






உலகில் ஏறக்குறைய 9000 வகையான பறவைகள் உள்ளன. மிக நீளமான இறக்கை உடைய பறவை ஆல்பட்ராஸ். இறக்கையின் நீளம் 3 மீட்டர். மிகச் சிறிய பறவை பீஹம்மிங். இதன் உடலின் மொத்த நீளம் 5.7 செ.மீ. இதில் பாதி பாகத்தில் மூக்கும், வாலும் அடங்கியுள்ளன. ஆஸ்ட்ரிச் பறவை இதைப் போல் 97,000 மடங்கு பெரியது. இப்பறவை மணிக்கு 48 கி.மீ. வேகத்தில் பறக்கும்.

- க. பூங்கொடி, சித்தோடு.



பறவை ஆப்பிளை அடைய வழி காட்டுங்கள்!



இந்தப் படத்தில் தவறு என்ன?

விடை : காற்றடிக்கும் திசைக்கு மாற்று திசையில் குடை பறக்கிறது.

''என் அக்கா வீட்டைக் கூட்டத் தெரியாதுன்னு சொல்லிட்டா!''

''ஏன்?''

''அவளுக்குக் கணக்கு வராதாம்!''

-தெ. இராமன், சென்னை-74.



பிருந்தாவனம்

கோகுலம்

பிப்ரவரி 2001

மலர்: 19

இதழ்:1



பக்கம் – 28

பறவை, பூச்சி, விமானம் பறப்பதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு பாதக் குறடு பறக்கிறது.

சிறிய கோள், பெரிய கோள் எது என்று தெரியும். மிகவும் கனமான கோள் எது தெரியுமா?

பக்கம் – 5




நல்ல நட்பு எப்பொழுதும் நன்மையே செய்யும். சலீமின் நண்பர்கள் எப்படிப் பட்டவர்கள்?

பக்கம் – 8



மயில் தோகை விரித்து ஆடுவது ஏன்?

பக்கம் – 76



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

வெங்காயத்திற்குக்

சிரிங்காபுரி என்ற நாட்டை நிரஞ்சன் என்ற மன்னர் அரசாட்சி செய்து வந்தார். அரசருக்கு விசித்ரா என்ற ஒரு பெண் குழந்தை இருந்தது. குழந்தையை மிகவும் அன்பாக வளர்த்து வந்தனர்.

ஒருநாள் அரசி நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தார். அரசரை அழைத்த அரசி, "நான் பிழைக்க மாட்டேன். விசித்ராவை ரொம்பவும் அன்பாக வளர்க்க வேண்டும். அவள் கண்ணில் கண்ணீரே வரக்கூடாது'' என்று கூறி இறந்து போனார்.

அரசரும் அரசி கேட்டுக் கொண்டபடியே விசித்ராவைச் செல்லமாக வளர்த்தார்.

விசித்ரா வளர்ந்து இளவரசியானாள். ஒரு நாள் அரண்மனை சமையலறைப் பக்கம் போனாள் இளவரசி. அங்கு வடைக்கு வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தார்கள் சமையற்காரர்கள்.

வெங்காயத்தை முதன் முதலாகப் பார்த்த விசித்ராவுக்கு அதை வாங்கிப் பார்க்க ஆசை வந்தது. வேகமாகச் சென்று வெங்காயத்தை எடுத்து உரித்தாள். அவ்வளவுதான்! வெங்காயத்தின் எரிச்சல் தாங்காமல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

"அப்பா, அப்பா!" என அழைத்தபடி ஓடினாள் விசித்ரா.

மகள் அழுவதைப் பார்த்து அரசரின் மனம் பதறியது. இளவரசியிடம் நடந்ததைக் கேட்டறிந்தார். உடனே அரசியிடம் தான் கொடுத்த வாக்கு அவர் நினைவுக்கு வந்தது. சமையல்காரரை அழைத்தார்.

''என் மகளுக்கு ஏன் வெங்காயம் கொடுத்தாய்?'' என்றார் கோபத்துடன் அரசர்.

''நீங்கள் இளவரசி எது கேட்டாலும் கொடுக்கச் சொல்லியிருக்கிறீர்களே?'' என்றார் பயத்துடன் சமையல்காரர்.

''வெங்காயம் கண் எரியும்





தடை!

என்று சொல்லக் கூடாதா? என் மகள் கண்ணில் கண்ணீரை வரவழைத்த உம்மைச் சிறையில் அடைக்க உத்தரவிடுகிறேன். இன்று முதல் நம் நாட்டில் வெங்காயம் உபயோகிக்கக் கூடாது. மீறி உபயோகித்தால் சிறைவாசம்தான்" என்று ஆணையிட்டார் மன்னர்.

வெங்காயம் இல்லாமல் சமையல் நன்றாக இல்லை என மக்கள் வருத்தப்பட்டார்கள். சமையல் ருசியாக இல்லை என மன்னர் சமையல்காரரைக் கோபித்தார். அவர்கள் என்ன செய்வது என்று திகைத்தார்கள்.

மக்கள் மன்னரிடம் முறையிட்டனர். மன்னர் "எது வேண்டுமானாலும் செய்வேன். வெங்காயத்தை மட்டும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டேன்" என்றார்.

நாட்டில் புதுவிதமான நோய் பரவியது. அந்நோய்க்கு வெங்காயச் சாறு கொடுத்தால் குணமாகி விடும். அரசரின் பிடிவாதத்தால் நிறைய மக்கள் நோயால் அவதிப் பட்டனர்.

அந் நோய் இளவரசியையும் தாக்கியது. அரண்மனை வைத்தியர் வந்து பார்த்தார்.

"அர்சே! இந் நோய்க்கு வெங்காயச் சாறுதான் சிறந்த மருந்து. அன்று வெங்காயத்தால் கண்ணீர் விட்ட இளவரசி, இன்று வெங்காயம் இல்லாமல் நோயால் கண்ணீர் விடுகிறார்" என்றார் வைத்தியர்.

அரசர் தன் தவறை உணர்ந்தார். மீண்டும் நாட்டில் வெங்காயம் புழக்கத்திற்கு வந்தது. நோயால் தாக்கப்பட்டவர்கள் குணமடைந்தனர்.

தன்னால்தான் நாட்டில் இத்தனை பிரச்னை ஏற்பட்டது என்பதை உணர்ந்த இளவரசி அன்று முதல் வெங்காயத்தின் பெயரைக் கூடச் சொல்வது இல்லை.

— ஜானகி குமார்

கடி ஜோக்ஸ்



''அஞ்சல் வழி கல்வி மூலம் படித்தேன்''

''எங்கே வேலை கிடைச்சது?''

''போஸ்ட் ஆபீசில்''

- எஸ்.மோகன், குணமங்கலம்.



''கட்டுரையைத் தலை கீழா எழுதியிருக்கியே, ஏண்டா?''

''நீங்கதானே சார் கட்டுரை சரியா இல்லே. 'திருப்பி' எழுதுன்னு சொன்னீங்க!''

- தஞ்சை தாமு.



''வாழை மரத்தை ஏன் சாலை ஓரத்தில் வைக்கிறாங்க?''

''தெரியலையேடா''

''அது 'தார்' விடும்ல!''

- ச. ஜெயலக்ஷ்மி, தஞ்சாவூர்.



''குளியல் சோப்பை நாங்க மாத்தவே மாட்டோம்! தாத்தா காலத்துலேர்ந்து ஒரே சோப்பைத்தான் பயன்படுத்துறோம்...''

''ஆச்சர்யமா இருக்கே! அந்த சோப்புக் கரையவே இல்லையா?''

- தஞ்சை தாமு.



''ஆமைன்னு ஒரு பத்திரிகை ஆரம்பிச்சீங்களே... எப்படி போகுது?''

''மெதுவாப் போகுது!''

- துரை. முருகேசன், காரமடை.

கனமான கிரகம்!



சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் புதன். சூரிய குடும்பத்தின் இரண்டாவது சிறிய கோள். (கடைக்குட்டி புளூட்டோ) இதன் குறுக்களவு 4,880கி.மீ.தான். நம் பூமியின் துணைக்கோளான சந்திரனைவிட 50சதம் பெரியது. இதன் உருவம் தான் சிறியதே தவிர, இது மிக மிக கனமான கோளாகும். ஏனெனில் இதன் மையப் பகுதி முழுவதும் இரும்பால் ஆனது. புதனின் மேற்பரப்பில் 4/5 பகுதியில் இரும்பு மட்டுமே உள்ளது. வெகு வேகமாய் நடக்கிற புதன், சூரியனை 88 நாட்களில் வலம் வந்து விடுகிறது. இது சுற்றி வரும் தூரம் எவ்வளவு தெரியுமா? 5.79 கோடி கிலோ மீட்டர். புதனுக்கும் சூரியனுக்கும் உள்ள



1974ல் மெரைனர் எடுத்த படம் (புதன்)


தூரமும் 5.79 கோடி கி.மீ.தான். ஆனால் புதன் கோளிலிருந்து சூரியனைப் பார்த்தால் எப்படி இருக்கும் என்கிறீர்கள்? அப்படியே தக, தகவென்று வானத்தை அடைத்துக் கொண்டு, பூமியிலிருந்து பார்ப்பதைப் போல் 2½ மடங்கு உருவம் பெரிதாக, பூதாகாரமாய், அப்படியே நம்மை விழுங்க வரும் கொள்ளிவாய்ப் பிசாசு போல் காட்சி தரும்!

புதன், சூரியனின் அண்டை வீட்டுக்காரர்தானே! வெப்பம் எவ்வளவு இருக்கும்? சூரியனை நோக்கியிருக்கும் புதனின் பகல் பக்கத்தில், வெப்பம் 350°c யாகவும், சூரியனைக் காணாத புதனின் இருட்டுப் பக்கத்தில் வெப்பநிலை –170°c ஆகவும் இருக்கும்! ஒரு பக்கம் கொதிக்கும் வெப்பம், மறுபக்கம் நினைத்தே பார்க்க முடியாத, உயிர்கள் வாழ இயலாத கடுங்குளிர். இதுதான் புதனின் சீதோஷ்ணநிலை!

புதனார், சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால், நம்மால் அவரைச் சாதாரண கண்களால் பார்த்துவிட முடியாது. பார்ப்பது கொஞ்சம் கஷ்டம்தான். சூரியன் உதிக்க ஒருமணி நேரத்துக்கு முன்னும், சூரியன் மறைந்து ஒரு மணி நேரம் வரையிலும் தொடு வானத்திற்கு அருகில் சூரியனை ஒட்டியே புதன் காட்சி தரும். மிகவும் சக்தி வாய்ந்த தொலை நோக்கியில் பார்த்தால் கூட இது குட்டி பந்துபோல் தெரியும்! நீண்ட காலம் புதனைப் பற்றிய நிறைய தகவல்கள், வானவியலாளருக்கும் கூடத் தெரியாமல் இருந்தன. நம் சந்திரன் போல் புதனும்கூட, தன் ஒருபக்க முகத்தை மட்டுமே சூரியனுக்குக் காட்டிக் கொண்டு சுற்றுகிறது என்று விஞ்ஞானிகள் கருதினர். 1965க்குப் பின்னர்தான், கோள்களுக்கு இடையிலுள்ள தூரம் மற்றும் தகவல்கள் சேகரிக்க உதவும் ரேடார் சாதனங்கள் மற்றும் ரேடியோ கதிர்கள் மூலம் பல சுவையான தகவல் தெரிய வந்தன. ரேடியோகதிர்கள் புதனின் இருபக்கத் தகவல்களையும் துல்லியமாய் வெளியிட்டன. மேலும், புதன் சுற்றும் வேகத்தையும் தெரிவித்தன. இப்படி சூரியனை 88 நாட்களில் வட்டமடிக்கும் புதன், தன்னைத் தானே ஒருமுறை தன் அச்சில் சுழல, 59 நாட்கள் ஆகின்றன. இது தன் அச்சில் மிக, மிக மெதுவாகத்தான் சுற்றும். நம் புதனில் ஒருநாள் என்பது, பூமியில் 59 நாட்களுக்குச் சமமானதாகும். புதன் சூரியனை ஒருமுறை சுற்றுவதற்குள் புதன் தன்னைத்தானே 1½ முறை சுற்றி விடுகிறது.

1974ல் அமெரிக்கா அனுப்பிய மெரைனர்-10 என்ற விண்வெளி ஓடம், புதனைப் பற்றிய நிழற்படங்களை நிறைய எடுத்துக் காட்டியது. புதனின் மேற்பகுதி படம், நம் சந்திரன் போலவே மேடு பள்ளங்களுடன் காணப்படுகிறது. இப்பள்ளங்கள் யாவும் விண்வெளித் தூசுகள் வேமாய் விழுந்து ஏற்பட்டவை. அம்மைவடு போல், பள்ளமும் மேடுமாய் இருக்கும்! புதன் 100 கி.மீ. விட்டம் உடையது. சமீபத்தில் உருவான பள்ளங்கள் சிறிதாகவும், சிறிது ஆழமாகவும் இருக்கின்றன.

— சுவாதி



"இரும்பு கடை எங்கே இருக்குங்க?"
"கரும்பு கடைக்குப் பக்கத்திலே."
"கரும்பு கடை எங்கே இருக்குங்க?"
"எறும்புகளா போகும், அந்தப் பக்கமா போனா கரும்புக்கடை வரும்!"

– டி.கே. சாமிலால்

எழுத்தால் எழுச்சியை ஏற்படுத்தியவர்!

உண்மை என்றும் ஒளிரும்; ஓங்கி வளரும்
உலக ஒற்றுமை மலரும்; அனைவரும் ஒன்றே
என்று உலகம் ஒருநாள் உணரும்!
-இப்படி கூறியவர் மகான் அரவிந்தர்.

● அரவிந்தர் லண்டனில் தூய பால் பள்ளியில் படித்தார். இலக்கியத் துறையில் ஏராளமான பரிசுகளை வாங்கி குவித்தார். 1890-ஆம் ஆண்டு, கேம்பிரிட்ஜில் உள்ள மன்னர் கல்லூரியில் சேர்ந்தார். அவருக்கு ஆண்டொன்றுக்கு 80 பவுன்ட் படிப்புதவித் தொகை கிடைத்தது. ஐ.சி.எஸ். படிப்பிற்கான போட்டித் தேர்வில் அவர் தேர்ச்சி பெற்றார்.



● 1893-இல் இந்தியா வந்த அரவிந்தர், பரோடாவில் அரசுப் பணியில் சேர்ந்தார். நில அளவுத்துறை, வருவாய்த் துறை எனப் பல்வேறு நிர்வாகப் பணிகளில் இருந்தார்.

● 1900 – ஆம் ஆண்டு, பரோடா கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர் ஆனார். பகுதி நேரப் பணியாக அங்கு பிரெஞ்சு மொழியையும் கற்பித்தார். மராத்தி, குஜராத்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலும் புலமை பெற்றார்.

● 1901– ஆம் ஆண்டு அரவிந்தருக்கும் மிருணாலினி என்ற அம்மையாருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது அரவிந்தருக்கு வய்து இருபத்தொன்பது; மிருணாலினிக்கு வயது பதினான்கு.

● இந்திய விடுதலைப் போரில், அரவிந்தர் தனக்குரிய பங்கைப் பத்திரிகைத் துறையின் மூலம் செலுத்தினார். பம்பாய் இதழான 'இந்து பிரகாஷ்' ஏட்டில் பல்வேறு கட்டுரைகள் எழுதினார். வந்தேமாதரம், தரும யோகி, கர்மயோகி ஆகிய இதழ்களுக்கும் ஆசிரியப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தினார்.

● தம் எழுத்தால் மக்கள் உள்ளத்தில் எழுச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தினார். வெள்ளையர் ஆட்சி அரவிந்தர் மீதும் அவர் நடத்திய 'வந்தே மாதரம்' இதழ் மீதும் ராஜதுரோக குற்றம் சாட்டியது.

● "அடிமைப்பட்டுக் கிடந்த என் பாரத மக்களுக்கு உரிமை உணர்வை ஊட்டியது சட்ட விரோதம் என்றால், நான் செய்தது குற்றம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்" – இது விசாரணையின்போது அரவிந்தர் கொடுத்த வாக்குமூலத்தின் ஒரு பகுதியாகும்.


● அரவிந்தரின் எழுத்துகள் கவிதை, திறனாய்வு, ஆராய்ச்சி, விரிவுரை எனப் பல தரப்பட்டவை. அவர் எழுத்துகள் ஆன்ம விடுதலையை நோக்கியவை. மனித சமுதாயத்தை உய்விக்க வந்தவை. இந்திய யோக முறையை மேலை நாட்டுக்கும் கொண்டு செல்ல உதவியவை.

● "உங்கள் உயர்வான இலட்சியத்துக்கு ஏற்றவாறு, கருவிகள் அமையாவிட்டாலும் செயலில் இறங்குங்கள். செயல் மூலம்தான் உங்கள் குறிக்கோளும் அதை நிறைவேற்றுவதற்கு உரிய சாதனமும் ஓங்கி வளரும்" என்று கூறியவர் அரவிந்தர்.


— டி.எஸ். பாலு,
சென்னை.

சலீமின் நண்பர்கள்!


வேணுவாரியத்
வி.எஸ்.
சஜீவன்






பணத்திற்காகத் தான் உன்னுடன் இருக்கிறார்கள்.
இல்லை. அவர்கள் எனக்காக உயிரை யும் தருவார்கள்.
நீ ஜாக்கிரதையாக இரு. நீ என் வியாபாரத் திற்கு உதவியாக இருக்கலாமே?
என் நண்பர் களைப் பிரிந்து என்னால் இருக்க முடியாதே.
ஏய், சலீம் பந்தயத்துக்கு நேர மாகி விட்டது.
நான் உடை மாற் றிக் கொண்டு வருகிறேன்.
மாதங்கள் சென்றன. மெக மூத் நோயால் படுக்கை யில் விழுந்தார்.
சலீம், நான் நீண்ட நாட்கள் உயிருடன் இருக்க மாட்டேன்.
அப்பா!


மகனே! இந்த பங்களாவை மட்டும் எப்பொழுதும் விற்காதே.
அப்படியே விற்கக்கூடிய நிலை ஏற்பட்டால் நீ முதலில் இந்தத் தூணைத் தான் விற்கணும்.
அப்பா! என்ன பேசுகிறீர்கள்?
மெகமூத் மறைந்தார். ஆனாலும் சலீமின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏதும் இல்லை.
அருமையான மது.
இந்த இறைச்சியும் கூட சுவையாக உள்ளது.
நாட்கள் சென்றன. ஒருநாள்—
சலீம் ஏதாவது சாப்பிட இருக்கிறதா?
இல்லை. சமையல்காரனுக்குப் பணம் தரவில்லை. அவன் வெளியேறி விட்டான்.
வியாபாரமும் நஷ்டத்தில் போய் விட்டது. வருமானத்திற்கு எந்த வழியும் இல்லை.
நாங்கள் பிறகு வருகிறோம் சலீம்.


இருங்கள். செஸ் விளையாடலாம்.
எங்களுக்குப் பசிக்கிறது. வருகிறோம்.
சலீம் தனிமையில் இருந்தான்.
இந்த பங்களாதான் இப்ப என்னிடம் இருக்கு.
அப்பா, பங்களாவை விற்பதற்கு முன் இந்தத் தூணை விற்கச் சொன்னாரே! முதலில் தூணை இடிப்போம்.
ஆஹா! தங்கக் காசுகள், வைரக் கற்கள்!
email:saifeatures@yahoo.com
SAI FEATURES,ALUVA-683107
சலீம் மீண்டும் பணக்காரனானான்.
சலீம், கதவைத் திற. உன்னுடன் மது அருந்தி வெகு நாட்களாகி விட்டன.
நீங்கள் என் நண்பர்கள் இல்லை. பணத்துக்காகத் திரும்பி வந்திருக்கிறீர்கள். உங்கள் நட்பு வேண்டாம். கிளம்பி விடுங்கள்.
மனம் திருந்திய சலீம், விரைவிலேயே தன் தந்தையைப் போல் மிகச் சிறந்த வியாபாரியாகி விட்டான்.



சுவை உணரும் உறுப்பு!

மைசூர்பாகு அற்புதம், உப்புமாவில், ஒரு கல் உப்பு தூக்கல். இப்படியெல்லாம் சொல்ல வைப்பது யார் தெரியுமா? உணர்ச்சிமயமான சுவைப் புலன் மிகுந்த நாக்குதான். நீங்கள் சொல்ல நினைக்கும் வார்த்தைகளைக் குரல்வளப் பெட்டியிலிருந்து வெளியிட உதவுவது நாக்குதான். உங்களின் உணர்வை வார்த்தை மூலம் உலகுக்கு வெளிப்படுத்த வைக்கும் சாதனம் நாக்கே. அது மட்டுமா?

உடல் பாதுகாப்பு



• நாக்கு


ராகம், தானம், பல்லவி என்றும் ஊ... லலலா என்றும் பாட உதவுவதும் நாக்கு என்ற மென்மையான உறுப்பே!

உயிர்களின் தேவையறிந்து, அதற்கேற்றவாறு, உணவைச் சோதிக்கும் துப்பறியும் நிபுணனும் நாக்குதான். நமக்கு மட்டுமல்ல. அனைத்து உயிரிகளின் உயிர் வாழ்தலுக்குத் தேவையான முக்கியமான உறுப்பு நாக்கு. இல்லையெனில் கெட்டுப்போன அல்லது விஷமுள்ள உணவைச் சாப்பிட்டுவிட நேரிடும். உயிரிகள் தமக்கு வேண்டிய உணவை சுவை மற்றும் வாசனைமூலம் அறிந்து உண்கின்றன.


சில குழந்தைகள் பலப்பம் சாப்பிடும்; சில குழந்தைகள் மண்ணை விரும்பி உண்ணும். பொதுவாக எல்லோருக்கும் ஐஸ் கிரீம், சாக்லேட், பால் பொருட்கள் என்றால் கொள்ளைப் பிரியம். வயதானவர்கட்கு எண்ணெய் பலகாரம் என்றாலே பிடிக்காது. இது ஏன் தெரியுமா? உடலுக்கு என்ன தேவையோ அதற்கேற்றாற் போலவே, நாக்கு உணவைத் தேடுகிறது. பலப்பம், சாக்பீஸ், சுண்ணாம்பு சாப்பிடும் குழந்தைகளுக்கு உடலில் போதிய அளவு கால்சியம் இருக்காது. மண் சாப்பிடும் குழந்தைகளுக்கு தாது உப்புக்கள் பற்றாக்குறை இருக்கும். வயதான பின் உடலில் தேவைக்கதிகமான கொழுப்புச் சத்து இருப்பதால், உடலுக்கு கொழுப்புச் சத்து தேவையில்லை என்பதால் உடலின் குறிப்பறிந்து நாக்குக்குக் கொழுப்பைக் கண்டால் பிடிப்பதில்லை.

சுவையை உணரும் சுவை அரும்புகள் மனிதன் மற்றும் பாலூட்டிகளுக்கு மட்டுமல்ல. நம்மைவிட சிறிய உயிரிகளுக்கும் உண்டு. சுவைப்புலன் என்பது என்ன? பொருள்களிலுள்ள வேதிப் பொருட்களின் தன்மையை மூளைக்குத் தகவல் தெரிவிப்பதுதான். ஒரு சிறு கல்லை வைத்துச் சுவைத்துப் பாருங்கள்! சுவை தெரியாது. ஆனால் சர்க்கரையை வைத்துப் பார்த்தால் அது இனிப்பாய் இருக்கும். ஒரு


• உப்பு




• கசப்பு



• புளிப்பு



• இனிப்பு





"அப்பா! நான் ஊரே தலை நிமிர்ந்து பார்க்கிற மாதிரி பெரிய ஆளா வருவேன்"

"நல்லது. அதுக்கு என்ன செய்யப் போற?"

"உடற்பயிற்சி செய்து ஏழு அடி உயரம் வளரப்போறேன்!"

- இரா. பாலமுரளி, தாரமங்கலம்.

பொருள் நீர்ம நிலையில் இருந்தால்தான் அதன் சுவையை சுவை அரும்புகள் உணர்ந்து தகவலை மூளைக்கு அனுப்ப முடியும். எனவேதான் கரையாத கல்லின் சுவை நமக்குத் தெரிவது இல்லை. நாக்கில் சர்க்கரையோ, உப்போ வைத்தால் அது கரைவதால் அதன் சுவை உணர்கிறோம். சுவை அரும்புகள் ஈரமான பரப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. எச்சில் ஊறும் எப்போதும் ஈரமான பகுதியில் நாக்கு வைக்கப்பட்டிருப்பதன் சூட்சுமம் இதுவே.

மிகச் சிறிய ஒரு செல் உயிரி அமீபாவுக்கு இவை உடல் முழுவதும் உள்ளதால் உடலின் எந்தப் பகுதியும் உணவை உட்கொள்ளலாம். ஹைடிரா போன்ற உயிரிகளுக்குச் சுவை அரும்புகள் கிடையாது. ஆனால் உணர் கொம்புகளில் சுவை உணரும் செல்கள் உள்ளன. மீன், தவளை போன்றவைகளுக்கு சுவை உணரும் அரும்புகள் தோல் பகுதி முழுமையும் உள்ளன.

உங்களுக்கு மட்டுமல்ல பட்டாம்பூச்சி, தேனீ மற்றும் ஈக்களுக்கும் நாக்கு உண்டு. எங்கே தெரியுமா? அவைகளின் கால் நுனியில்!

சுவை அரும்புகள் நாக்கில் மட்டுமல்ல மேலண்ணம் தொண்டை, குரல் வளையை அடுத்த குருத்தெலும்பு பகுதியில் கூடப் பரவிக் கிடக்கின்றன. குழந்தைகளுக்குச் சுவையரும்புகள் மிகுதியாக உள்ளன. முக்கியமாக வாயின் பல பாகங்களில் பரவியும் நாக்கின் முன் பகுதியில் ஏராளமாகவும், முதிர்ந்தவர்களின் நாக்கில் மிகக் குறைவாகவும் உள்ளன. நாக்கின் நடுவிலுள்ள 1/3 பகுதியில் சுவையரும்புகள் இல்லையென்றே கூறலாம். மனிதனுக்கு சுமாராய் 3000 சுவையரும்புகளும், பன்றிக்கு 5,500 சுவையரும்புகளும், பசுவுக்கு 35,000 சுவையரும்புகளும் உள்ளன. உணவை மெல்லாமல் விழுங்கும் பாலூட்டிகளுக்குச் சுவையரும்புகள் மிகச் சிலவே உள்ளன.

நாக்கு நான்கு அடிப்படை முதன்மைச் சுவைகளான இனிப்பு, புளிப்பு (அமிலம்), உப்பு மற்றும் கசப்புத் தன்மையை அறிய வல்லது. இவற்றுடன் உவர்ப்பு, காரச்சுவை மற்றும் கைப்பு (உலோகச் சுவை) சுவையுடன், பலவகைக் கலவைச் சுவைகளையும் உணரும் தன்மையுடையது. கல்கண்டை அல்லது இஞ்சியைக் கடித்துத் தின்னும்போது, அவற்றின் சுவையை மட்டுமின்றி, அதன் கடினம் சொரசொரப்பையும்கூட அறிகிறோம். இது எதனால் தெரியுமா? நாக்கில் போட்டதும், சுவையரும்புகள் மட்டுமின்றி, அத்துடன் உணர்ச்சி நரம்புகளும் பெரிதும் கிளர்ச்சி அடைவதுடன், மோப்ப நரம்புகளும் கிளர்ந்தெழுகின்றன.

நாம் ஓர் உணவை நுகரும்போது அதனால் அறியும் நுட்பமான சுவைகள், உண்மையில் அதன் மணமே ஆகும். சுவைக்கப்படும் பொருள் நம் மூக்கிலுள்ள வாசனை உணரும் உறுப்புகளைத் தூண்டுவதால் சுவையை உணர்கிறோம். நாம் பொதுவாக சுவை என்று பாகுபாடு செய்யும் உணர்வுகளில் பெரும்பாலானவை நாக்குணர்ச்சியோடு, மூக்குணர்ச்சியும் பெரிதளவு கலந்த கலப்படமே!

நாக்கில் தனித்தனியான சுவைக்குத் தனித்தனியான சுவையரும்புகள் வெவ்வேறு பகுதிகளில் உள்ளன. தித்திப்பு நாவின் நுனியிலும் கசப்பு நாவின் அடியிலும், புளிப்பு நாவின் பக்கவாட்டிலும், உப்புச் சுவை நாவின் நுனிக்கு அருகிலும் உணரப்படுகிறது. குழந்தைகள் இனிப்பு மிட்டாயைப் பல்லால் மெல்லாமல் நக்குவதும், கசப்பு மருந்தை தொண்டையில் படாமல் விழுங்குவதும் இதனால் ஏற்பட்ட பழக்கங்கள்தான்.

பாதுகாப்பது எப்படி?

1. தினமும் பல் துலக்குவது போலவே நாக்கையும் சுத்தம் செய்ய வேண்டும்.
2. நாக்கை மெதுவாகச் சுத்தம் செய்வது நல்லது. கடுமையாகச் சுத்தம் செய்யும் போது சுவை அரும்புகள் பாதிக்கப்படும்.
3. நாக்கில் அதிக சூடான பொருளையோ, குளிர்ந்த பொருளையோ வைத்துச் சுவைக்கக் கூடாது.
4. படுக்கப் போகும் முன் ஏதாவது சாப்பிட்டு அப்படியே தூங்கக் கூடாது. வாயைச் சுத்தம் செய்துவிட வேண்டும்.
5. நாக்கில் புண், கொப்புளங்கள் ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் காட்ட வேண்டும்.

- மோகனா

குறைந்து வரும் கொரில்லாக்கள்!

உலகில் மிக வேகமாகக் குறைந்து கொண்டு வரும் இனங்களில் மலைவாழ் கொரில்லாக்களும் ஒன்று. இன்றைய கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதும் ஏறக்குறைய 600 மலைவாழ் கொரில்லாக்களே காணப்படுகின்றன. இவற்றில் பாதிக்கும் மேலாக உகாண்டா பகுதியில் உள்ளன. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மலைவாழ் கொரில்லாக்கள் மனிதர்கள் அஞ்சக்கூடிய உகாண்டாவின் எரிமலைப் பகுதிகளில் சர்வசாதாரணமாக இடம் பெயர்ந்து சென்று, பலமாதங்கள் கழித்துத் தமது தாயகமான காங்கோவிற்குத் திரும்புகின்றன.

இலை, பழங்கள், மூங்கில்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்ளும் இவை மக்களைக் கூட்டமாக காணும் போது சிறிது அச்சத்தோடும் வெட்கத்தோடும் காணப்படுகின்றன.

நில அடிப்படையில் பிரிக்கப்படும் கொரில்லாக்கள் உடலமைப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் வேறுபடுகின்றன.


தாழ்நிலப் பகுதிகளில் வாழும் கொரில்லாக்கள் மலைவாழ் கொரில்லாக்களை விட அடர்த்தியான, குட்டையான ரோமங்கள் கொண்டுள்ளன. மலைவாழ் கொரில்லாக்கள் இரைதேடி அலைவதில்லை. ஆனால் நிலத்தில் வாழும் கொரில்லாக்கள் பல மைல்கள் இரையை அலைந்து தேடிப் பிடிக்கும். கனிகள் இவற்றின் விருப்பமான உணவாகும்.


கொரில்லாக்கள் அனைத்தும் கறுகறுப்பாக இருக்கும். மாறி வரும் சூழ்நிலைக்குத் தன்னை மாற்றிக் கொண்டு வாழும் தன்மை கொண்டது. இதை அறிவியலில் 'பாய்க்கிலோ தெர்ம்ஸ்' என்பர்.

ஆப்பிரிக்காவின் பிவிந்தி மாவட்டத்தில் கொரில்லாக்களைப் பாதுகாப்பதற்கு ஓர் காப்பகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மலைவாழ் கொரில்லாக்களைப் பாதுகாத்து அவற்றைப் பழகப்படுத்தி பார்வையாளர்கள் அருகில் அமர்ந்து களிக்க வகை செய்துள்ளனர். இவை சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவர்கின்றன.

உலகில் மிகக் குறைந்த அளவே காணப்படும் மலைவாழ் கொரில்லாக்களை பாதுகாக்க அவை இனம் வாரியாகப் பிரிக்கப்பட்டு கூட்டங் கூட்டமாக வாழும் சூழலை ஏற்படுத்தித் தருவதோடு, அவற்றைக் கொல்வதற்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

— அ. ஹாஜா நூருல்லா,
11ம்வகுப்பு ஏ. பிரிவு,
ஹமீதியா மேல்நிலைப்பள்ளி,
திருக்களாச் சேரி.





விஷம விச்சு
செல்வம்
விச்சுவும் நண்பர்களும் கிரிக்கெட் விளையாடினார்கள்.
டேய் பார்த்து
ஐயோ, தொலைந் தோம்.
பந்து பட்ட வேகத்தில் கண்ணாடி ஜன்னல் உடைந்தது.
பயப்படாதீங்க, நான் பாத்துக்கறேன்!
இனிமேல் விளை யாடவே முடியாதுடா விச்சு.
இப்படி ஜன்னலை உடைச்சிட்டீங்களேடா. இனிமேல் இந்தப் பக்கம் வரக் கூடாது. போங்கடா...
அங்கிள், விளையாடுவோம். ஆனால் இனிமேல் பந்து ஜன்னல் பக்கம் வராது.
சூப்பர்டா விச்சு!
எவ்வளவு வேகமா அடிச்சாலும் யார் வீட்டு ஜன்னல் பக்கமும் போகாது.

கோகுலம் க்விஸ் முடிவு

டிசம்பர் க்விஸ் போட்டி சுலபமாக இருந்திருக்கிறது என்பதைக் குவிந்திருக்கும் கடிதங்கள் மூலம் அறிய முடிகிறது. சரியான விடைகளை எழுதிய இருபது பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. வி. மனீஷ், கொடிநார், குஜராத்.
2. த. சிவபாரதி, எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மல்லிபாளையம், ஈரோடு மாவட்டம்.
3. அ. சுபா, எட்டாம் வகுப்பு, ஏ.எம்.ஜி. பள்ளி, பொம்மிடி, தருமபுரி மாவட்டம்.
4. எஸ். எத்திராஜன், அய்யம்பாளையம், திருச்சி மாவட்டம்.
5. எம். கஜேந்திரன், தக்கோலம், வேலூர் மாவட்டம்.
6. பி. பின்னிஜான்பால், கோட்டையூர், சிவகங்கை மாவட்டம்.
7. ஜி.எஸ். கார்த்திக், ஏழாம் வகுப்பு, வைரவிழா மேல்நிலைப் பள்ளி, கோபிசெட்டிபாளையம்.
8. பி. கௌசல்யா, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
9. எஸ். செந்தில் முருகன், கொன்னாம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
10. ஆர். ஆர். கௌரி, மேட்டூர் அணை.
11. டி. சீதாலெக்ஷ்மி, பரப்பனூர், நாகப்பட்டிணம் மாவட்டம்.
12. மே.நீ. தமிழ்க்கோமகன், கவுண்டம்பாளையம், திருப்பூர் வட்டம்.
13. தி. நந்தினி, எட்டாம் வகுப்பு, புனிததெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருத்துறைப்பூண்டி.
14. பி.கே. பிரேம்நாத், சேலம்.
15. தன்யா விஜயகுமார், கோழிக்கோடு.
16. எஸ். விக்னேஷ், சென்னை.
17. அ. செல்லப்பன், இறச்சகுளம், கன்னியாகுமரி மாவட்டம்.
18. ஆர். லாவண்யா, சென்னை.
19. ஆர். பிரவீண்குமார், நெய்வேலி.
20. செ. கார்த்திக்ராஜ் கோவை.



சரியான விடை :

1. உலகின் முதல் பெண் அதிபர் சிரிமாவோ பண்டாரநாயகா.
2. மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர்.
3. இந்த ஒலிம்பிக்ஸில் தடகளப் போட்டிகளில் ஐந்து பதக்கங்களை வென்ற அமெரிக்கப் பெண் மரியான் ஜோன்ஸ்.
4. அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத்.
5. தென் இந்தியாவின் மான்செஸ்டர் கோயம்புத்தூர்.
6. ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்தவர் அதியமான்.
7. நிலவில் ஒலி கேட்காது.
8. தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியவர் ராஜராஜசோழன்.
9. வைரம் கார்பன் படிகத்திலிருந்து கிடைக்கிறது.
10. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நார்வே.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கண்ணில் கண்ட

ஓவியர் ஜெயராஜ்



மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படிக்கும்போது நடந்த சம்பவம் என்றும் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கும். லாஜிக் பாட வகுப்பு. பேராசிரியர் பால் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கு வட்டமான முகம்; நல்ல புஷ்டியான கன்னங்கள். அவர் தீவிரமாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்க, நான் அவரைப் படம் போட்டுக் கொண்டிருந்தேன். அவரது முழு உருவமும் வரைந்து முடித்துவிட்டு, தலைப்பகுதிக்கு shade கொடுத்துக் கொண்டிருந்தேன்.

நான் அவர் பாடம் நடத்துவதைக் கவனிக்காமல் படம் போட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டார் போலிருக்கிறது. என்னை உற்றுப் பார்த்ததைக் கவனித்த மற்ற மாணவர்களும் என்னைப் பார்த்தனர். இதையெல்லாம் அறியாமல் படத்தை நிறைவு செய்வதில் நான் மும்முரமாக இருந்தேன். எனது திருப்திக்கேற்ற வகையில் படத்தைப் பூர்த்தி செய்து விட்டு நிமிர்ந்து பார்த்தால் பேராசிரியர் உட்பட ஒட்டு மொத்த வகுப்பும் என்னை உற்று நோக்கியவாறு இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். வகுப்பு முடிந்தது. 'என் அறைக்கு வா' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் பேராசிரியர்.

'இன்றைக்கு நன்றாக மாட்டிக் கொண்டு விட்டோம்' என்று நடுங்கியவாறே அவரைப் பார்க்கச் சென்றேன். என்னைப் பார்த்தவுடன் "அந்தப் படம் எங்கே?" என்றார் அவர். தயங்கியவாறே எடுத்துக் கொடுத்தேன். வாங்கிப் பார்த்தவுடன் அவர் முகம் மலர்ந்தது. ஒன்றுக்குப் பலமுறை என்னையும் அந்தப் படத்தையும் மாறி, மாறி பார்த்தார். அருகில் அழைத்தார். முதுகில் தட்டிக் கொடுத்தார் "உன் கையெழுத்துப் போட்டுக் கொடு" என்று அவர் சொன்னவுடன் தான் எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. உற்சாகத்துடன் 'ஜெயராஜ்' என்று போட்டுக் கொடுத்தேன்.

அவர் என் கையெழுத்தைப் போடச் சொல்லி படம் வாங்கிக் கொண்டதை என் ஓவிய திறமைக்கு ஒரு அங்கீகாரமாக எடுத்துக் கொண்டேன். அப்படி எனக்கு அவர் அங்கீகாரம் கொடுப்பதற்கு முன் என்னுள் புதைந்து கிடந்த திறமையை, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி வெளிக் கொண்டு வந்தவர் என் தந்தை. துவக்கப் பள்ளியில் படிக்கும்போது எல்லா சிறுவர், சிறுமியரைப் போலவே நானும் கையில் கிடைக்கும் பல்பம், பென்சில், பேனா என்று எடுத்துக்கொண்டு எதையாவது வரையத் துவங்கி விடுவேன். அவற்றைப் பார்க்கும் என் தந்தை "அட பிரமாதமா போடறியே... நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது கூட இப்படி வரைய மாட்டேனே" என்று சொல்லி உற்சாகப்படுத்துவார். பள்ளி நாட்களில் நான் வரைவதில் ஈடுபட மாட்டேன். பெரும்பாலும் சனி, ஞாயிறு மற்றும் கோடை விடுமுறையில்தான் என் ஓவியப் பயிற்சி நடக்கும்.

துவக்கக் கல்விக்குப் பிறகு சேதுபதி உயர்

நிலைப்பள்ளியில் சேர்ந்தேன். பாரதியார் பணியாற்றிய பள்ளி. இன்று நான் தொழில் ரீதியான ஓவியனாக உருவாவதற்கு அங்கு போடப் பட்ட அடித்தளம்தான் காரணம். ஓவிய ஆசிரியர் வெங்கடசாமி நாயுடுவை மறக் கவே முடியாது. லீவு நாட்களில்கூட பள்ளிக்கு வந்து வரைந்து கொண்டிருப்பார். அதைப் பார்க்கும் என் நண்பர்கள் 'டிராயிங் மாஸ்டர் பள்ளியில் வரைந்து கொண்டிருக் கிறார்' என்று சொல்வார்கள். உடனே நான் பள்ளிக்கு ஓடுவேன். ஆசிரியர் வரை வதையே பார்த்துக் கொண்டிருப்பேன். "என்ன பார்க்கிறே? என்னைப் போல் வரை யணும்... தெரியுமா...!" என்பார் அவர். மது ரையில் ஹிக்கின் பாதம்ஸ், பழனியப்பா பிர தர்ஸ் போன்ற புத்தகக் கடைகளுக்குச் செல் வேன். 'ஓவியராவது எப்படி?' போன்ற புத் தகங்களை எடுத்துப் பார்ப்பேன். அதில் பயிற்சிக்காகக் கொடுக் கப்பட்டிருக்கும் உருவங்களைக் கையில் உள்ள நோட்டுப் புத்தகத்தில் ஒரு அவுட் லைன் ஸ்கெட்ச் போட்டுக் கொள்வேன். கடைக்காரர்கள் கண்டுகொள்ள மாட்டார் கள்.


ஒரு நல்ல ஓவியனாக உருவாவதற்கு அடிப்படை, மனிதர்களுடைய உடற்கூறு (Anatomy) பற்றிய விவரங்கள் அவனுக்கு அத் துப்படியாக இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான் கண், மூக்கு, காது, இடுப்பு, கால்கள் என்று ஒவ்வொரு பாகங்களையும் எந்தவித தயக்கமுமில்லாமல் வரைய முடி யும். இவ்வாறு நான் பழகுவதற்கு என் சகோ தர, சகோதரிகள் எனக்கு மிக உதவியாக இருந்தார்கள். 'கொஞ்சம் போஸ் கொடும்மா' என்று என் சகோதரியிடம் கேட்டால் தயங்காமல் நான் சொல்லும்படி போஸ் கொடுப்பார்.

காட்சிகளை வரையுங்கள்!

நான் படித்த பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியர் அறையில் பாரதியார் படம் ஒன்று இருக்கும். வேட்டியை தார் பாச்சி முறையில் கட்டிக்கொண்டு கைகளில் தடி யோடும் கண்களில் ஒளியோடும் காட்சி யளிப்பார் பாரதி. அந்தப் படத்தை அப் படியே வரைய வேண்டும் என்று ஒருநாள் அறையின் ஜன்னலுக்கு வெளியே நின்று வரைந்தேன். நான் உன்னிப்பாக வரைந்து கொண் டிருந்த சமயத்தில் பின்புறம் யாரோ தோளைத் தட்டுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தால் தலைமை ஆசிரியர் "எதுக்குக் கஷ்டப்பட்டு இங்கு நின்று கொண்டு வரைகிறாய்? உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு வரை" என்று



சொல்லி எனக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார்! எட்டாவதிலிருந்து பதினோறாவது வரை படிக்கும்போது பள்ளியில் நடந்த ஓவியப் போட்டிகளில் நான்தான் முதல் பரிசு வாங்கினேன். 'எனக்கு முதல் பரிசு ஏன் கொடுக்கப்பட்டது. அந்தப் படம் எப்படிப்பட்ட படம்' என்று மாணவர்களுக்குள் முணுமுணுப்புகள் இருந்தன. உடனே ஓவிய ஆசிரியர் எல்லா படங்களையும் பள்ளியில் கண்காட்சி போல வைத்துவிட்டார். மாணவர்கள் எல்லா படங்களையும்



பார்த்த பிறகு 'டேய்... ஜெயராஜ் படம் உண்மையிலேயே அசத்தலாத்தான் இருக்கு. முதல் பரிசு கொடுக்க வேண்டியதுதான்' என்று பேசிக்கொண்டதைக் கேட்டதும் எனக்கு சந்தோஷம். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது நானும் என் நண்பர்களும் 'சிற்பி' என்றொரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தினோம். அதில் பெரும்பகுதி என் ஓவியங்கள்தான் இருக்கும். அந்தப் பத்திரிகைக்கு நண்பர்கள் வட்டாரத்தில் ஏக கிராக்கி.

ஒருவர் முழு ஓவியனாக வர வேண்டுமென்று விரும்பினால் life sketch போட்டுப் பழக வேண்டும். கல்லூரியில் படிக்கும் போது மதிய உணவு இடைவேளையில், சாப்பிட்டு விட்டு பேராசிரியர்கள் அறை வாயிலில் போய் உட்கார்ந்து கொள்வேன். பேராசிரியர்கள் படித்துக் கொண்டும், கொஞ்சம் ஒய்வாக கால் மேல் கால் போட்டுக் கொண்டும் விதவிதமான போஸ்களில் காட்சியளிப்பார்கள். வெளியே உட்கார்ந்துகொண்டு அவர்களை அப்படியே வரைந்து பழகுவேன்.

என் தந்தை மதுரையில் ஸ்பென்ஸரில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரைச் சென்னைக்கு மாற்றி விட்டார்கள். எனக்கும் கல்லூரி படிப்பு முடிந்துவிட்டது. என் தந்தைக்கு என்னை ஸ்பென்ஸரில் வேலைக்குச் சேர்த்துவிட ஆசை. ஒரு வெள்ளைக்கார அதிகாரியை அறிமுகப் படுத்தி அவரைத் தொடர்பு கொள்ளச் சொன்னார் தந்தை. நானும் அந்த அதிகாரியை அடிக்கடி சென்று பார்த்துக் கொண்டிருப்பேன். இழுத்தடித்துக் கொண்டிருந்தார். எனக்கு மிகவும் கடுப்பாகி விட்டது. "சார்... வேலை கொடுப்பது என்றால் உடனே கொடுத்து விடுங்கள்... இப்படி இழுத்தடிக்காதீர்கள்' என்று ஒருமுறை சொல்லிவிட்டேன். உடனே அவர் 'நீ ரொம்ப வாயாடுகிறாய். உனக்கு வேலை கொடுக்க முடியாது' என்றார். 'இதைத்தான் எதிர்பார்த்தேன்' என்று அவரிடம் விடைபெற்று அப்பாவிடம் கொஞ்சம் பயந்தவாறே விஷயத்தைச் சொன்னேன். "அந்த வெள்ளைக்காரன் ஒரு மாதிரிதான். நீ கேட்டதில் ஒன்றும் தப்பில்லை. எதுக்காக நீ வேலை தேடணும். உன்கிட்டயே ஓவியத் திறமை இருக்கே... அதை வைத்து, பத்திரிகைகளுக்குப் படம் வரைந்து கொடுக்கலாமே" என்றார் அப்பா.

என்னை ஓவியனாக உருவாக்கிக் கொள்ள முனைந்தபோது ஒவ்வொரு கட்டத்திலும் தந்தை உட்பட, குடும்பத்தினர், பள்ளி ஆசிரியர்கள், குறிப்பாக ஓவிய ஆசிரியர், கல்லூரி பேராசிரியர்கள் ஆகியோர் ஊக்குவித்ததை எண்ணி, இப்போதும் மனது விம்முகிறது. பத்திரிகை அலுவலகங்களுக்குப் படை எடுத்தேன். இந்த வகையில் என்னைப் பக்குவப்படுத்தி, நான் இன்று சிறந்த ஓவியனாக விளங்குவதற்கு அடித்தளம் போட்டவர் மறைந்த திரு. எஸ்.ஏ.பி. அண்ணாமலை அவர்கள்.

பல பேர் என்னிடம் 'பத்திரிகைகளில் ஓவியராக அறிமுகமாவது எப்படி?' என்று கேட்கிறார்கள். முதலில் நல்ல ஓவியனாகப் பாருங்கள். யாருடைய ஸ்டைலையும் காப்பியடிக்காதீர்கள். உங்களுக்கென்று ஒரு தனித் தன்மையை உருவாக்கிக் கொள்ளுங்கள். பல புத்தகங்களைப் பார்த்து அதில் உள்ள படங்களைப் பார்த்து வரைந்து கொண்டே

எந்த ஓவியனுக்கும் படிப்பும் இருக்க வேண்டும். அந்தப் படிப்பால் கிடைக்கும் அறிவு, ஒருவனது ஓவியத் திறமையை மேம்படுத்த உதவி செய்யும்.

இருங்கள். சித்திரமும் கைப்பழக்கம். கண்ணில் கண்ட காட்சிகளைத் தூரிகையினால் வளைத்துப் போடுங்கள். வீட்டுக்குள் பூனை சுருண்டு படுத்துத் தூங்குவது, நாய் கால்களைத் தூக்கி விளையாடுவது, நெற்றி வேர்வை நிலத்தில் பட பாடுபடும் தொழிலாளி என்று பல காட்சிகளைப் பதிவு செய்து கொள்ளலாம்.

முறையான பயிற்சி என்றால் முதலில் ஹெச்.பி பென்சிலால் ஸ்கெட்ச் போட்டுப் பழக வேண்டும். அதன் பிறகு பென்னில் ஸ்கெட்ச் மீது இந்தியன் இங்க் கொண்டு போட வேண்டும். இது போன்று லைன் டிராயிங் பழகி விடும் பட்சத்தில் வளைவுகளும், கோடுகளும் சகஜமாகி விடும். தலை



"இந்தக் காலத்துல யாரையுமே நம்ப முடியலை"

"ஏண்டா?"

"எந்த உத்திரவாதத்துல உன்கிட்ட நான் காரணத்தைச் சொல்றது...?"

– ராமகிருஷ்ணன்

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

முடி போன்றவற்றிற்கு பிரெஷ் உபயோகித்து தான் வரைய வேண்டும். இப்படி பழகிய பின் அடுத்த கட்டமாக wash drawing போட்டுப் பழக வேண்டும். புகைப்படம் போலவே wash drawingல் போட முடியும். இந்தியன் இங்க் கேக் வாங்கி வைத்துக்கொண்டு, சரியான விகிதத்தில் தண்ணீரைச் சேர்த்து லைட்டாகவும், டார்க்காகவும் நாம் விரும்பியபடி, தேவைக்கேற்றபடி வரைய முடியும். பத்திரிகைகளுக்கு மட்டும்தான் வரைய முடியும் என்பது இல்லை. இயற்கை காட்சிகளைப் போடுவதிலும் சிறந்த ஓவியர்கள் இருக்கிறார்கள். அவர்களது படைப்புகள் லட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்கின்றன. ஓவியக் கல்லூரியில் சேர்ந்து படிப்பது தொழில் ரீதியான ஓவியராக உருவாக மிகவும் உதவியாக இருக்கும். எக்காரணம் கொண்டும் ஆரம்பத்தில் வண்ணத்தைப் பயன்படுத்தாதீர்கள்.

ஓவியனாக விருப்பம் என்றால் அதற்காக முயற்சி செய்து, ஓவியனாக உருவாகுங்கள். ஆனால் எந்தக் கட்டத்திலும் படிப்பை விட்டு விடாதீர்கள். எந்த ஓவியனுக்கும் படிப்பும் இருக்க வேண்டும். அந்தப் படிப்பால் கிடைக்கும் அறிவு, ஒருவனது ஓவியத் திறமையை மேம்படுத்த உதவி செய்யும் என்பது என் அழுத்தமான கருத்து.

தொகுப்பு: ப்ரியன்
படம்: ராஜன்



விளையாட்டுகள் இருவகைப்படும். ஒன்று உள் விளையாட்டு. இன்னொன்று வெளி விளையாட்டு. சில விளையாட்டுகள் அந்தந்த மண்ணிற்கே உரியது. உலக அளவில் பிரபலமாகாதது. ஆனால் ஒரு சில விளையாட்டுகள் உலகமெங்கும் பிரபலமாக ஆடப்பட்டு வருகின்றன. கால் பந்தாட்டம், கிரிக்கெட், ஹாக்கி, கைப்பந்தாட்டம், டென்னிஸ் போன்ற முக்கியமான விளையாட்டுகளில் செஸ் என்றழைக்கப்படும் சதுரங்கமும் குறிப்பிடத்தக்க ஆட்டமாகும்.


சதுரங்கத்தின் பிறப்பிடம் இந்தியாதான். சதுரங்கம் என்றால் நான்கு அங்கங்கள் என்று பொருள். யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நால்வகைப் படைகள் ஒரு ராஜ்யத்தின் பாதுகாப்புக்கு அவசியமானவை. இதற்குச் சதுரங்கச் சேனை என்று பெயர். இதைப் போன்றே நான்கு படைகளையுடைய இவ்விளையாட்டிற்கு சதுரங்கம் என்ற பெயர் ஏற்பட்டது.

தொடக்க காலத்தில் சதுரங்க விளையாட்டை நான்கு பேர் அமர்ந்து பகடையை உருட்டி விளையாடினார்கள். அப்போது இது வெறும் பொழுதுபோக்கு விளையாட்டாகவே இருந்தது. வெற்றி, தோல்வியைப் பகடைதான் தீர்மானித்தது.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இச்சதுரங்க விளையாட்டு மெதுவாகப் பாரசீகத்திற்குப் பரவியது. பாரசீகர்களிடமிருந்து ஸ்பானியர்களுக்கும் பிறகு ஐரோப்பாவிற்கும் பரவியது.

சில நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவை ஆண்ட மன்னர்கள் அரண்மனை தர்பாரில் பெரிய கட்டங்களைப் போட்டு நிஜ மனிதர்களை யானை, குதிரை போன்ற முகமூடிகளை அணியச் செய்து விளையாடியிருக்கிறார்கள்! இதை நூற்றுக்கணக்கானோர் கண்டு ரசித்திருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்குச் சதுரங்கம் பரவியபோது ஒவ்வொரு நாட்டிலும் சில மாறுதல்களுடன் விளையாடப்பட்டு வந்தது. இன்றும்கூட ஜப்பான், சீனா, மலேசியா நாடுகளில் சதுரங்கத்தை ஒத்த விளையாட்டுகள் பிரபலமாக உள்ளன.



இன்றைய நவீன செஸ் போட்டிகள் 15 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டன. இதில் இருவர் மட்டுமே பங்கேற்றனர். பகடை பயன்படுத்தப்படவில்லை. 19 ஆம் நூற்றாண்டில்தான் சர்வதேச அடிப்படையில் உலக நாடுகளிடையில் செஸ் போட்டிகள் நடைபெற்றன. 1955 ஆம் ஆண்டில் பொதுவான விதிமுறைகள் வகுக்கப்பட்டன. இன்று சர்வதேச செஸ் போட்டிகளை ஃபிடே அமைப்பு ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது.

ஆரம்ப காலத்தில் வெறும் பொழுதுபோக்கு அம்சமாகவே இருந்த செஸ் போட்டிகள், இன்று பொறுமையாக சிந்தித்து, கவனம் செலுத்தி விளையாடும் மூளை ஆட்டமாக மாறிவிட்டது. முழுக்க முழுக்க சிந்தனையும் கடின உழைப்புமே வெற்றி பெற வைக்கின்றன. இவ்விளையாட்டால் மனோதிடமும் ஏற்படுகிறது.

செஸ் போர்டில் 64 கட்டங்கள் கறுப்பு, வெள்ளை நிறங்களில் மாறி மாறி அமைந்திருக்கின்றன. இரு ஆட்டக் காரர்களுக்கும் தலா 16 காய்கள் உண்டு. இவற்றில் அரசன் - 1, அரசி அல்லது அமைச்சர் -1, யானை - 2, தேர்-2, குதிரை - 2, வீரர்கள் - 8 என மொத்தம் 16 காய் கள். இவற்றிற்குத் தனித்தனி உருவங்கள் உண்டு. ஒருவரின் காய் கறுப்பு நிறத்திலும் மற்றவரின் காய் வெள்ளை நிறத்திலும் இருக்கும். இருவரும் மாற்றி, மாற்றி காயை நகர்த்த வேண்டும். ஒருவர் ஒரு சமயத்தில் ஒரு காயை மட்டுமே நகர்த்த முடியும்.

சில நாடுகளில் மனதைப் பக்குவப் படுத்தக்கூடிய செஸ் விளையாட்டை பள்ளிகளிலேயே சொல்லித் தரப்படுகிறது. எல்லாக் காய்களையும் வெட்ட முடியும். அரசனை மட்டும் வெட்டாமல் தாக்கிக் கைப்பற்றுவது தான் இதன் நோக்கம்.


இந்தியாவில் பிறந்த விளையாட்டான செஸ் இதுவரை மேல்நாட்டு விளை யாட்டாகவே திகழ்ந்து வந்தது. அந்த எண்ணத்தை மாற்றும் வகையில் நம் மண்ணுக்கு இந்த ஆண்டில் பெருமை கிடைத்திருக்கிறது.

அட்டையில்: **ராகவ், ஸ்ருதி**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



செஸ் தோன்றியது எப்படி?



கடைசிப் பக்கத்தில் வெளியிட்டது ஏன்?

✉ தூத்துக்குடியிலிருந்து **க. துர்கா காத்யாயினி** "எங்களுக்கு அன்பு கலந்து அறிவுரை வழங்கும் தலையங்கத்தைக் கடைசிப் பக்கத்தில் வெளியிட்டது ஏன்? ஆசிரியர் பக்க ஜோக் பகுதியில் எங்களைப் பங்கேற்க விட்டதில் மகிழ்ச்சி. கோகுலம் சுழல் கோப்பையில் எங்கள் பள்ளி ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு இன்னும் முயற்சி செய்து முதலிடத்தைப் பிடிப்போம்"என்கிறார்.

✉ "தீங்கு செய்யாத ஒட்டகச் சிவிங்கி கட்டுரைப் படித்தேன். நிறைய விஷயங்கள் அறிந்துகொண்டேன். நியூஸ் பகுதி மூலம் எங்களுக்கு உலக நடப்புத் தெரிந்து கொள்ள முடிகிறது. கோகுலம் ஒவ்வொரு சிறுவருக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது" என்கிறார் திருப்புலிவனத்திலிருந்து **இ.சே. அறிவழகன்.**

✉ புள்ளபூதங்குடியிலிருந்து **என். சுதாகர்** "இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் கட்டுரைப் படித்தேன். அவரின் அரிய கண்டுபிடிப்பான $E=Mc^2$, குவாண்டம் கோட்பாடு, மக்களுக்கு அவர் செய்த சேவை என பல தகவல்களைத் தந்தது எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்தது" என்கிறார்.

✉ "கோகுலம் சுழல் கோப்பையை வென்ற செந்துறை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்" என்கிறார் கடலாடியிலிருந்து **கே. சக்திவேல்.**

✉ தூத்துக்குடியிலிருந்து **க. சௌம்யா மணி** "உடல் பாதுகாப்புப் பகுதி மிகவும் அருமை. மனிதனைப் புற உலகோடு இணைப்பதில் முக்கிய உறுப்பான கண்ணைப் பற்றி, உடல் நலத்தைக் கண்ணாய்ப் பேண வேண்டும் என்று சொல்லாமல் சொல்லி விட்டீர்கள். ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாயைப் பார்த்ததும் பயந்து விட்டேன். ம்... சரியான தேர்வுதான்" என்கிறார்.

✉ புதுப் பொலிவுடன் கோகுலத்தை எதிர்பார்த்த எனக்கு ரொம்பவே மகிழ்ச்சியை அளித்துவிட்டது கோகுலம். எதிர்கால வழிகாட்டி, விஷம விச்சு, உடல் பாதுகாப்பு, நிறைய செய்திகள் என அசத்தி விட்டீர்கள்" என்கிறார் ஸ்ரீரங்கத்திலிருந்து **எம். சுபா.**

✉ தேக்கடியிலிருந்து **வி. ஸ்வேதா** "நிறைய பக்கங்களை வண்ணத்தில் கொண்டு வந்திருக்கிறீர்கள். முழுமையாக வண்ணத்தில் வந்தால் இன்னும் கூடுதல் சிறப்பு. மீனாக மாறிய கெங்கோரா கதையும் சூப்பர், படமும் சூப்பர்" என்கிறார்.

✉ "கேமராவில் போட்டோ எடுக்க யாருக்குத்தான் ஆசை இல்லை. எனக்கும் அந்த ஆசை இருந்தது. ஆனால் இதுவரை யாரிடமும் கூறியது இல்லை. எனக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்தது யோகாவின் அனுபவங்கள். உண்மையிலேயே இந்தப் பகுதி எதிர்கால வழிகாட்டிதான்" என்கிறார் திருவள்ளூரிலிருந்து **கே. சண்முகம்.**

புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை அனுப்பிய இரா. காயாம்பு, இரா. மாசிலாமணீஸ்வரி சோழபுரம், குற்றாலம் எல். தீபா, பானையங்கோட்டை ப. நடேசன் ஆகியோருக்கு எங்கள் நன்றி.

– ஆர்

புதிர் உலகம்



I எங்கள் திருச்சிற்றம்பலம் பள்ளியில் 9, 10 வகுப்புகளுக்கிடையே குழுப் படகு போட்டி நடைபெற்றது. 10 ம் வகுப்பில் A, B, C என்ற மூன்று மாணவிகளும் 9ம் வகுப்பில் D, E, F என்ற மூன்று மாணவிகளும் கலந்து கொண்டதில் 10ம் வகுப்பு மாணவிகள் A, B, C வெற்றி பெற்றனர். ஆறு மாணவிகளும் ஆற்றைக் கடந்து அடுத்த ஊருக்குச் செல்ல நின்று கொண்டிருந்தார்கள். அங்கு ஒரே ஒரு சிறிய படகு இருந்தது. அப் படகில் ஓட்டுபவரைச் சேர்த்து இருவர் மட்டுமே போக முடியும். தற்சமயம் படகு காலியாக இருந்தது. அங்கிருக்கும் ஆறு மாணவிகளுக்கும் படகு ஓட்டத் தெரியும். ஆறு பேரும் ஆற்றைக் கடக்க வேண்டும்.

நிபந்தனை ஒன்றே ஒன்று தான். எக் காரணத்தைக் கொண்டும் எந்த ஒரு கரையிலும் தோற்றவர்கள், ஜெயித்தவர்களை விட அதிக எண்ணிக்கையில் இருக்கக் கூடாது. ஜெயித்தவர்கள் மட்டும் எண்ணிக்கையில் அதிகம் இருக்கலாம். ஆனால் படகில் எத்தனை முறை வேண்டுமானாலும் சென்று வரலாம். இந்த நிபந்தனைக் குட்பட்டு ஆறு பேரும் ஆற்றைக் கடந்து விட்டனர். எப்படி என்று கூறுங்கள் பார்க்கலாம்?

II 1) 'உலகின் கோதுமைக் களஞ்சியம்' எனப்படுவது எது?

2. சோழர்களின் மக்களாட்சி முறையை அறிய ஆதாரம் உள்ள இடம் ______

3. முதல் உலகப் போரின்போது இருந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ______

4. 'ஏரிகள் நிறைந்த நகரம்' என்று இந்தியாவின் எந்த நகரத்திற்குப் பெயர்?

5. ஹைதராபாத், செகந்திராபாத் எனும் இரட்டை நகரங்களைப் பிரிக்கும் ஏரியின் பெயர் என்ன?

6. 'மலைகளின் அரசி' என்று இதனை அழைக்கிறோம்.

உ ______
______
______
______
______
______

– சிவ. மணவழகி,
திருச்சிற்றம்பலம்,
மயிலாடுதுறை.

III கலைந்துள்ள வார்த்தைகளை ஒழுங்குபடுத்தினால் மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய பொருள் ஒன்று கிடைக்கும்?

○				து பெ ய ரி
	○			க ம் ன ன
	○			ய ம் சி வ
			○	த் வ ல் த

IV இங்குள்ள கட்டங்களில் சில எண்கள் உள்ளன. காலியாக உள்ள கட்டங்களில் எழுதியுள்ள அதே எண்களைத் தக்கபடி மாற்றி எழுதினால் அந்தக் கட்டங்களை மேலும் கீழும் இடமும் வலமும் குறுக்கேயும் எப்படி கூட்டினாலும் பதினெட்டு கிடைக்கும். உங்களால் முடியுமா?

1		8	
	6		3
6		3	
	1		8

– ஆர். சுமதி,
நாமகிரிப்பேட்டை.

விடை 51ம் பக்கம்

● கு. மணிவண்ணன், சத்திரப்பட்டி

? இதயத்துடிப்பு எப்படி ஏற்படுகிறது? அது 'லப்', 'டப்', 'லப்', 'டப்' என்று எவ்வாறு துடிக்கிறது?

! இதயத்தின் வலது மேலறையின் மேற்புறத்தில், இதயத் தசையில், அணுக்கள் திரண்டு 'கணு' போன்று அமைந்துள்ளது.. இதன் பெயர் 'சைனோ ஏட்ரியல் நோடு', 'மேலறைக்கணு' என்று தமிழில் அழைக்கலாம். இதேபோல் மேலறையின் கீழ்ப் புறத்தில் 'ஏட்ரியோ வெண்ட்ரிக்குலர் நோடு' உள்ளது. இதற்கு 'மேலறைக் கீழறைக்கணு' என்று பெயர். இதிலிருந்து ஒரு தசைநார்க்கற்றை கிளம்புகிறது. அதற்கு 'ஹிஸ்ஸின் கற்றை' (Bundle of His) என்று பெயர். இது வலது, இடது என இரு பிரிவுகளாகப் பிரிந்து, முறையே வலது கீழறை மற்றும் இடது கீழறைக்குச் செல்கின்றது. அங்கு இவை மேலும் சிறு கிளைகளாகப் பிரிந்து இதயக் கீழறைகளின் எல்லா அணுக்களுக்கும் செல்கின்றன. இக்கிளைத் தசைநார்களுக்குப் 'பர்க்கின்ஜி மின்கடத் திழைகள்' (Purkinje Fibres) என்று பெயர்.


இதயத்தின் மேலறைக்கணுவிற்கு 'இதயமுடுக்கி' (Pacemaker) என்றொரு காரணப் பெயருண்டு. ஏனென்றால்,

இதயத் துடிப்பு எப்படி ஏற்படுகிறது?

இதயம் துடிப்பதற்கு ஆதார கருவியாக இருப்பது இதுதான். உடலில் வேறெதற்கும் இல்லாத ஒரு தனித்தன்மை இதற்கு உண்டு. 2 செ.மீ. - 2 மி.மீ. அளவுள்ள இக்கணுவில் தொடர்ச்சியாக மின்விசை உருவாகிறது. இது இதயத்தைத் துடிக்கச் செய்யும் குணமுடையது. இந்த மின்னாற்றல் மூலம் இதயத் தசைகள் சுருங்குவதற்குரிய தூண்டுதல் ஆணைகளை இதயம் பிறப்பிக்கிறது. எவ்வாறெனில், இந்த மின்விசை இதயமேலறைத் தசை மூலம் மேலறைக் கீழறைக்கணுவிற்குக் கடத்தப்பட்டு, அங்கிருந்து வலது மற்றும் இடது தசை நார்க் கற்றைகள் வழியாக மின் கடத்திழைகளை அடையும் போது இதயம் துடிக்கிறது. இந்த மின் விசைப் பரிமாற்றமானது தொடர்ச்சியாக நடப்பதால் இதயமும் தொடர்ந்து துடிக்கிறது.

இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

ஒரு மின்விசை மேலறைக்கணுவில் உற்பத்தியாகி, அது வலது மேலறைக்கும் இடது மேலறைக்கும் பரவி, அவற்றைச் சுருங்க வைக்கின்றன. பின்பு அந்த மின்விசையானது மேலறைக் கீழறைக்கணு, வலது மற்றும் இடது தசைநார்க்கற்றைகள், மின் கடத்திழைகள் ஆகியவற்றை அடையும்போது, கீழறைகள் சுருங்கத் துவங்குகின்றன. அதே நேரத்தில் மேலறைகளில் மின்விசை இல்லாததால் அவை விரிகின்றன. மேலறைகள் விரிந்ததும் மேலறைக்கணு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்






கேட்கட்டுமா டாக்டர்?

கொள்கிறது. இப்போது கீழறைகள் விரிகின்றன. மேலறைக்கணுவில் மீண்டும் மின்விசை உற்பத்தியாகிறது. உடனே, அவை சுருங்கு கின்றன. இவ்வாறு தொடர்ந்து மின் விசைப் பரிமாற்றம் நடக்கும்போது இதய மும் தொடர்ந்து சுருங்கி, விரிந்து இதயத் துடிப்பை ஏற்படுத்துகிறது.

மேற்சொன்ன மின் விசைப் பரிமாற்றத்தில்



டாக்டர்
கு. கணேசன்



உள்ள ஒரு சிறப்பு என்ன வென்றால், மேலறைக்கணு வில் மின்விசை உற்பத்தியா கின்ற அதே வேகத்தில் அது இதயம் முழுவதும் பரவுவ தில்லை. மேலறைகள் சுருங்கும்போது கீழறைகள் விரிகின்றன. கீழறைகள் சுருங்கும்போது மேலறைகள் விரிகின்றன. இப்படி ஒரு முறை இதயம் சுருங்கி விரிவதை ஒரு இதயத்துடிப்பு (Heart Beat) என்கிறோம்.

நெஞ்சில் நடுமார்பெலும் புக்குச் சற்று இடப்பக்கமாக உள்ளங்கையை வைத்துப் பார்த்தால் இதயம் துடிப்பதை உணர முடியும்.

உடல்நலமிக்க ஒரு மனிதனின் இத யம் நிமிடத்திற்கு 72 முறை துடிக்கிறது. ஏன்றாலும், இதயத் துடிப்பின் எண் ணிக்கை நிமிடத்திற்கு 60 முதல் 90 வரை இருந்தாலும் அதை இயல்பு அளவாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தை யின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 100 முதல் 120 வரை இருக்கலாம். கடின உழைப்பின்போது, உடற்பயிற்சியின் போது, ஓடும்போது, பயப்படும்போது, கோபப்படும்போது, உணர்ச்சிவசப்படும்போது, காய்ச்சலின்போது, இன்னும் பல நோய்களின்போது இதயம் அதிவேகமாகத் துடிக்கும்.

இதயம் துடிக்கும்போது, 'லப்', 'டப்', 'லப்', 'டப்' என்று குறைந்த அளவில் ஒலிகள் உண்டாகின்றன. இதற்கு 'இதய ஒலிகள்' என்று பெயர். இந்த ஒலிகள் மனித உடலில் எந்த உறுப்புக்கும் இல்லாத, இதயத்திற்கு மட்டுமே உரித்தான சிறப்பம்சமாகும். ஸ்டெத்தாஸ்கோப்பைக் கண்டுபிடித்த பிறகுதான் இதயத்தில் ஒலிகள் உண்டாகின்ற உண்மை உலகத்திற்குத் தெரியவந்தது.

இந்த ஒலிகள் உருவாவதற்கு இதயத்தடுக்கிதழ்கள் (Heart Valves) காரணமாகின்றன. இதயம் ஒவ்வொருமுறை துடிக்கும் போது, இதய அறைகள் சுருங்குவதும், பின்பு விரிவதுமாக இருக்கும். கீழறைகள் (Ventricles) சுருங்கி, மேலறைகள் (Auricles) விரியும்போது இரத்தம் கீழறையிலிருந்து மேலறைக்குச் செல்வதைத் தடுக்க, ஈரிதழ் தடுக்கிதழும், மூவிதழ் தடுக்கித ழும் மேல் நோக்கிச் சென்று மூடிக் கொள்ளும். இத்தடுக்கிதழ் கள் இவ்வாறு மூடும்போது உண்டாகின்ற ஒலி 'லப்' (Lub) என்று கேட்கும். இது 'முதல் இதய ஒலி' (First Heart sound) என்று அழைக்கப்படுகிறது. இதே போன்று மேலறைகள் சுருங்கி, கீழறைகள் விரியும்போது நுரையீரல்தமனியி லிருந்தும், மகாதமனியிலிருந்தும் இரத்தம் கீழ்நோக்கி வரு வதைத் தடுக்க, நுரையீரல் தமனித் தடுக்கிதழும், மகாதமனித் தடுக்கிதழும் கீழ்நோக்கிச் சென்று மூடிக் கொள்ளும். அப் பொழுது 'டப்' (Dub) என்று ஒலி கேட்கும். இது 'இரண்டா வது இதய ஒலி' (Second Heart Sound) என்று அழைக்கப்படுகிறது.

இதயம் தொடர்ந்து துடிக்கும்போது இந்தத் தடுக்கிதழ்கள் மூடுவதும், பின்பு திறப்பதுமாக இருப்பதால் இதயத்தில் 'லப்... டப்...லப்...டப்...' என்று தொடர்ச்சியாக ஒலிகள் கேட்கின்றன.

திருவாழத்தான்

விசாலாட்சிப் பாட்டிக்குத் தோட்ட வேலையில் ரொம்ப விருப்பம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் வீட்டுப் புறக்கடையில் உள்ள சிறு தோட்டத்தில் மண்ணைக் கிளறி, கொத்திக் கொண்டிருப்பார்.


தோட்டத்தில் நிறைய விளையும். "அம்மா ரெண்டு கொத்து மல்லித் தழை கேட்டாள்" என்று எதிர் வீட்டு அம்பிப் பயல் வந்து அடிக்கடி நிற்பான்.

அன்று பிற்பகல் மூன்று மணி அளவில், மிளகாய் நாற்று நடலாம் என்று பாட்டி தோட்டத்தில் மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தார்.

அப்போது டக், டக் என்று தோசை திருப்பி எதிலோ இடிபட்டு, தோண்ட மறுத்தது. என்னவாக இருக்கும் என்று எண்ணியபடி பாட்டி தோண்டத் தொடங்கினார். மரக்கட்டை, லேசான சந்தன மணம். எடுத்தார். ஒரு ஜோடி பாதக் குறடுகள்.

அந்தக் காலத்தில், நம் பெரியவர்கள் மரக் கட்டையால் ஆன குறடு எனச் சொல்லப்பட்ட காலணியைத் தான் பூணுவர். செருப்பு வடிவில் இருக்கும் குறடில், கால் கட்டை விரலாலும், அடுத்த விரலாலும் பிடித்துக் கொள்வதற்கான வகையில் குமிழ் இருக்கும்.

அப்படியான குறடு ஜோடி இது. சந்தனம் நன்றாக மணத்தது. இந்த மணம் இருந்ததால்தான்,



கரையான் அரிக்கவில்லை.

எழுந்து, செம்பு நீரை ஊற்றி மண் போக அலம்பினார் பாட்டி.

ஔவையாரின் பாதக் குறடு பற்றி ஒரு வெண்பா பாட்டி நினைவுக்கு வந்தது.

ஔவையாரின் பாதக் குறடுகளாக அவை இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டார் 'பாட்டி. அவற்றை பூஜை அறையில் வைத்தார். சந்தனத்தைக் குறடுகள் மீது இட்டார்.

ஒரு நாள் இந்தக் குறடுகளை பூஜை அறையில் எதிர்வீட்டு அம்பிப் பயல் பார்த்துவிட்டான்.


"என்ன, பாட்டி? பூஜையறையில் செருப்புக் கட்டையை வச்சுருக்கீங்களே!" என்றான்.

பாட்டி "இது விஷேசமான பாதக் குறடு அம்பி!" என்றாள்.

"யாரோடது?"

"ஔவையாருடையாது."

''பாலும், தெளி தேனும்னு செய்யுள் எழுதியிருக்காரே, அந்த ஔவை



பறக்கும் பாதக்குறடு!



யாரா?"

"ஆமா."

குறடுகளைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார் பாட்டி. அம்பிப் பயலும் அப்படியே செய்தான்.

அன்று பள்ளியில் ஆண்டு விழா. பிரசங்கம், விளையாட்டுப் போட்டிகள் என நிகழ்ச்சிகள் இருந்தன. பிற்பகல் செல்ல வேண்டும்.

அம்மா அம்பிப் பயலை அழைத்து, எதிர்வீட்டுப் பாட்டியிடம் இரண்டு கொத்துமல்லித் தழை வாங்கி வரும்படிச் சொன்னார்.

அம்பிப் பயல் சென்றான். வாசல் கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் நடந்தான். ''பாட்டி...'' கூப்பிட்டான். பதில் இல்லை. பாட்டி குளித்துக் கொண்டிருந்தார். பூஜை அறைக்குச் சென்றான். அங்கு இருந்த பாதக் குறடுகள் பார்வையில் பட்டன. எடுத்து அணிந்து பார்த்தால் என்ன?

மெதுவாக அவற்றை எடுத்தான். இரு விரல்களால் குமிழ்களைப் பற்றிக் கொண்டான். பாட்டி வரும் ஓசை கேட்டது. வீட்டுக்கு ஓடிவிட வேண்டும் என்று நினைத்தான்.

அவ்வளவுதான். அதே விநாடியில் வீட்டில் நின்றான்.

ஆச்சர்யமாக இருந்தது அவனுக்கு! இந்தப் பாதக் குறடுகள் நினைத்த மாத்திரத்தில் அந்த இடத்துக்குக் கூட்டிச் செல்பவை என்பதைப் புரிந்து கொண்டான்.

"கொத்து மல்லித் தழை வாங்கி வந்தாயாடா?" அம்மா கேட்டார்.

"அங்கே பாட்டியைக் காணோம், அம்மா" என்றான்.

"வீடு திறந்து கிடக்கு. எங்கே போயிருப்பார் பாட்டி.

இந்தச் சின்னக் காரியம் பண்ணத் துப்பில்லை'' என்று அவனைக் கடிந்து கொண்டு விட்டு, தானே சென்றார் அம்மா.

அடுத்த தெருவில் இருக்கிறான் அம்பிப் பயலின் வகுப்புத் தோழன். அவனைப் பார்த்து, இந்தப் பாதக் குறடுகளைக் காட்ட வேண்டும் எனத் தோன்றியது.

அந்த கணம் அம்பிப் பயல் ரகுநாதன் வீட்டுக்குள் இருந்தான்.

"ராஜா ராமா, நீ எங்கே வந்தே இங்கே. கால்லே செருப்பு வேறே போட்டுக் கொண்டு இருக்கே! செருப்புப் போட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளே வரக் கூடாது" என்றான் ரகுநாதன் அவனிடம்.

சோனிப் பயலான அம்பிப் பயல் சாதாரணமாக எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்வதில்லை. 'டிரில்' நேரம் என்றால் கசக்கும்.

"இது சாதாரணச் செருப்பு இல்லேடா. பாதக் குறடு. ஔவையாருடையாது."

"என்ன உளர்ரே?" முகத்தில் அச்சமும், ஐயமும் சேர, ரகுநாதன் கேட்டான்.

"சரி. உனக்கு இப்ப எங்கே போகணும்?"

"கடைக்குக் காய் வாங்கப் போகணும்."

"வா. நான் கூட்டிக் கொண்டு போறேன். இப்படி என் கையைப் பிடிச்சுக்க."

ரகுநாதன் அம்பிப் பயலின் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

அதே விநாடி இருவரும் காய் கடையின் எதிரில் நின்றனர்.

"எப்படிடா?" ரகுநாதன் வியப்புடன் அம்பிப் பயலிடம் கேட்டான்.

"அதான் சொன்னேனே, இது ஔவையார் பாதக் குறடு. இதைப் போட்டுக் கொண்டுதான் அவர் ஊர் ஊரா, சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடுன்னு சுத்தி இருக்கார்."

ரகுநாதன் அம்பிப் பயலுக்கு 'ஐடியா' கொடுத்தான். "இன்னிக்குப் பள்ளி ஆண்டு விழா இல்லையா? விளையாட்டுப் போட்டிலே நீ கலந்துக்கறே. ஓட்டப் பந்தயம் எல்லாவற்றிலும் நீதான் முதல் பரிசு வாங்குவாய்."

"ஆமா!" என்றான் அம்பிப் பயல் வாயைப் பிளந்து கொண்டு.

சோனிப் பயலான அம்பிப் பயல் சாதாரணமாக எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்வதில்லை. 'டிரில்' நேரம் என்றால் கசக்கும். இன்று அவன் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளத் தயாரானான்.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றால், முன்னதாகவே பெயர் கொடுத்திருக்கவேண்டும். பெயர் கொடுக்காத அவன் எப்படி போட்டியில் கலந்து கொள்ள முடியும்?

நூறு மீட்டர் ஓட்டம். எட்டுப் பையன்கள் ஓடத் தயாராக நின்றார்கள். அருகே ரகுநாதனும், அம்பிப் பயலும் ஓரமாக நின்றனர்.

டிரில் மாஸ்டர் விஸில் கொடுத்தார். எட்டுப் பேரும் ஓடத் தொடங்கினார்கள். ரகுநாதன் அம்பிப் பயலைத் தள்ளிவிட்டான். அவ்வளவுதான். அந்த எட்டுப் பேருக்கும் முன்னால், அம்பிப் பயல் இலக்கை அடைந்தான்.

கை தட்டல் வானுக்குச் சென்றது. கூடி இருந்தோர் அம்பிப் பயலைத் தட்டிக் கொடுத்து, கை கொடுத்துப் பாராட்டினர்.


டிரில் மாஸ்டர் ஓடி வந்தார்.

"நீதான் பேர் கொடுக்கலயே! எப்படி ஓட்டப் பந்தயத்தில் கலந்துக்கிட்டே?" அவர் கேட்டார்.

"நான் 40,000 ரூபாய் கொடுத்து வண்டி வாங்கினது தெரிஞ்சா என் அண்ணன் தொலைச்சுடுவார்''

''அவ்வளவு பொறுப்பில்லாதவரா?''


- சாயம் வெ. ராஜாராமன்



லாம்'' அவனுடைய கையைப் பிடித்து இழுத்துச் சென்றார் டிரில் மாஸ்டர்.

தலைமையாசிரியர் முன்னால் அவனை நிறுத்தி, ''நூறு மீட்டர் ஓட்டத்துலே கலந்து கொள்ள இவன் பேர் கொடுக்கவில்லை, சார். இருந்தாலும் கலந்து கொண்டிருக்கிறான். முதலாவதாகவும் வந்திருக்கிறான்'' என்றார்.

''ஆமா. நானும் பார்த்தேன்'' என்றார் தலைமை ஆசிரியர். அவர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அம்பிப் பயலை நோக்கி அவர்,'' உன் பேர் என்ன'' என்று கேட்டார்.



''சும்மா ஓடிப் பார்த்தேன், சார். முதல்லே வந்துட்டேன்.''

''எந்த வகுப்பு?''

''மூணாம் வகுப்பு.''

''ஒரு மூணாம் வகுப்புப் பையன் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிற பசங்களோட ஓடி அவங்களை ஜெயிக்கிறதா? எப்படி முடிஞ்சது உன்னாலே?''

''அதான் பார்த்திங்களே!''

''வா, தலைமையாசிரியரிடம் போக

''ராஜா ராமன்''

''எப்படி உன்னாலே பந்தயத்தில் முதலாவதாக வர முடிந்தது?''

''இதோ, இந்தப்பாதக் குறடு போட்டுக் கொண்டு இருக்கேன், இல்லையா? இது வேகமா எங்கே வேணாலும் கூட்டிக் கொண்டு போகும்.''

அதிர்ச்சியும், வியப்பும் அடைந்தார்

தலைமை ஆசிரியர்: அவனுடைய பாதங்களைப் பார்த்தார். "ஏது?"

"ஔவையாரோடது."

"ஔவையாருடையதா? என்ன உளர்றே?"

"ஆமாம், சார். எதிர் வீட்டுப் பாட்டி தோட்டத்தைக் கொத்தரபோது கிடைச்சுதாம். போட்டுப் பார்க்கலாம்னு எடுத்துக் கொண்டு வந்தேன்."

தலைமையாசிரியர் டிரில் மாஸ்டரைப் பார்த்தார். டிரில் மாஸ்டர் தலைமையாசிரியரைப் பார்த்து விழித்தார்.

"ஔவையாரோட பாதக்குறடு ரெண்டும் உன்னிடம் இருக்காம், அப்படியா?"

அதே சமயம் அம்பிப் பயல் வீட்டை நினைத்துக் கொண்டான். அந்த விளையாட்டு மைதானத்தில் அத்தனை பேர் எதிரில் சட்டென்று காணாமல் போனான்.

தன் வீட்டில் இருந்தான்.

அந்தப் பாதக் குறடுகள் இரண்டையும் நீர் விட்டு நன்கு கழுவினான். துடைத்து, இரண்டுக்கும் சந்தனப் பொட்டும், குங்குமப் பொட்டும் வைத்தான்.

அவற்றை எடுத்துக் கொண்டு சத்தம் போடாமல் சென்று, எதிரே பாட்டி வீட்டு பூஜை அறையில், அந்தப் பாதக் குறடுகள் எப்படி அங்கு இருந்தனவோ, அப்படி வைத்துவிட்டு, ஓசைப் படுத்தாமல் திரும்பியும்போது பாட்டி பார்த்து விட்டார். அம்பி பாதக்குறடு பறக்கும் விஷயத்தையும், அன்று நடந்த நிகழ்ச்சிகளையும் ஒன்றுவிடாமல் கூறி முடித்தான்.

பாதக்குறடு பறக்கும் விஷயம் அறிந்ததிலிருந்து பாட்டிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'இயற்கைக்கு மாறான சக்தி வாய்ந்த பாதக் குறடு மனிதர்கள் கையில் கிடைத்தால் என்னவெல்லாம் நடக்கும்! இதை அனுமதிக்கக் கூடாது' என்பதில் பாட்டி உறுதியாக இருந்தார்.

நள்ளிரவு நேரம். பாட்டி பாதக் குறடுகளை எடுத்து மீண்டும் தோட்டத்தில் புதைத்தார். புதைத்த இடத்திற்கு மேல் ஒரு துளசி மாடத்தையும் வைத்தார். பிறகு திருப்தியுடன் வீட்டிற்குள் சென்று உறங்கினார்.

ஒரு வாரம் கழித்து இரண்டு அதிகாரிகள் அம்பிப்பயலைத் தேடி வந்தனர்.

மாலை நேரம். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து வீட்டுப் பாடம் செய்து கொண்டிருந்தவனிடம், "நீதான் ராஜாராமனா?" என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

தலையசைத்தான்.

"ஔவையாரோட பாதக்குறடு ரெண்டும் உன்னிடம் இருக்காம், அப்படியா?"

"எங்கிட்டே இல்லையே" என்று பயந்தபடி சொன்னான் அம்பிப் பயல்.

"பொய் சொல்லாதே. உன் பள்ளிக்கூட தலைமையாசிரியர் எங்களுக்கு விவரமாக எழுதி இருக்கார். எங்கே அந்தப் பாதக் குறடு?"

எதிர் வீட்டுப் பாட்டிகிட்டே, பூஜை அறைலே இருக்கு."

வந்த அதிகாரிகள் எதிர் வீட்டினுள் சென்றனர். அச்சத்துடன் எதிர்வீட்டைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் அம்பிப் பயல்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் வெளியே வந்தனர். ஒருவர் கையில் அந்தப்பாதக் குறடுகள் இருந்தன. அவற்றை அவர் ஒரு நாளேட்டுக் காகிதத்தினுள் சுற்றியபடி கிளம்பினார்.


இப்படி யாராவது தேடி வருவார்கள் என்பதை அறிந்த பாட்டி தமது தந்தையாரின் பாதக்குறடுகளை எடுத்துத் தயாராக வைத்திருந்தார். அவர் நினைத்தபடியே வந்திருந்த தொல்பொருள்துறை அதிகாரிகளுக்குச் சாதாரண பாதக் குறடுகளைக் கொடுத்து அனுப்பி வைத்துவிட்டு நிம்மதி பெருமூச்சு விட்டார் பாட்டி.


"உனக்காக நேத்து அரை மணி நேரம் பஸ் ஸ்டாண்டில் நின்னுக்கிட்டே இருந்தேன்!"

"அப்புறம்?"

"உட்கார்ந்துட்டேன்!"

- நெ. இராமன்





வட்ட நிலா!

வானத்திலே வட்டநிலா
எட்டிப் பார்க்குது - அது
வாவாவெனப் பாப்பாயெனைப்
பார்த்து அழைக்குது!

சிந்துமழகை முந்தித்தந்து
சிணுங்கி அழைக்குது - என்
சிந்தைமிகக் குளிர்ந்திடவே
சிரித்து அழைக்குது!

எங்கள்வீட்டுக் கூரைவழியே
எளிதாய் நுழையுது - எனை
ஏற்றதோழி என்றேயாட
எண்ணி அழைக்குது!

வீட்டுப்பாடம் முடித்தபின்னே
வெளியில் ஓடுவேன் - இன்று
இரவு முழுதும் அதனுடனே
இனிதாய் ஆடுவேன்!

எங்களுடன் சேர்ந்துஆட
உனக்கும் ஆசையா - உன்
அம்மாவிடம் கேட்டு வாயேன்
அழைத்துப் போகிறேன்!

மு.நடராசன்




உங்கள் நூலகம்

புனிதா ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்காகப் புத்தகங்களைப் படித்துக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் வகுப்பு நண்பர்கள் ராஜாவும் காயத்ரியும் வந்து சேர்ந்தார்கள்.

"என்ன புனிதா பேச்சுப் போட்டிக்குத் தயாராயிட்டியா? எனக்குத் தான் சரியான ரெஃபரன்ஸ் புத்தகம் கிடைக்கலை" என்றாள் காயத்ரி வருத்தத்துடன்.

"கவலைப்படாதே! எனக்குப் பிடித்த தலைவர் என்ற தலைப்பில் நான் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தைப் பற்றி தான் பேசப்



சிரிக்கவும் சிந்திக்கவும் ஏற்றநூல்!

போறேன். வசதியான குடும்பத்தில் பிறந்து, ஆங்கிலப் பேராசிரியராக வேலை பார்த்தவர். வேலையைத் துறந்து காந்தியடிகளின் சுதந்தரப் போராட்டத்தில் குதித்தவர். எம்.வி. வெங்கட்ராம் எழுதிய இந்தப் புத்தகத்தில் பல சுவையான விஷயங்கள் இருக்கு. இதைப் பயன்படுத்திக்கப் போறேன்" என்று நிறுத்தினாள் புனிதா.

"உனக்கு சரி. எனக்கும் ஏதாவது புத்தகம் கொடுத்து உதவக் கூடாதா புனிதா?" என்றாள் காயத்ரி.

"இதோ அதே ஆசிரியர் எழுதிய ராஜாராம் மோகன் ராய் பற்றிய புத்தகம்"– புனிதா.

"கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏற்றப்பட்ட கொடுமைக்கு முடிவுகட்ட சட்டப்பூர்வமான வழியைக் கொண்டு வந்தவர் தானே மோகன்ராய்" என்றான் ராஜா.

"நீ சொல்றது சரிதான். அதுமட்டுமல்ல, இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்று ஆங்கிலேயரே இவரைப் புகழாரம் சூட்டியிருக்கின்றனர். ராஜா உனக்கு ஏதாவது புத்தகம் வேணுமா?" – புனிதா

"நான் போட்டியில் கலந்துகலை. ஏதாவது கதைப் புத்தகங்கள் இருந்தால் கொடு" என்றான் ராஜா.

"பாலமுருகன் என்பவர் எழுதியிருக்கிற தெனாலிராமன் கதைகள் புத்தகம் இருக்கு. நீயும் படிச்சு சந்தோஷப்படலாம். உன் தங்கைக்கும் கதை சொல்லலாம். படங்கள் கூட இருக்கு" என்றாள் புனிதா.

"ராஜா நானும் ஒரு புத்தகம் உனக்குத்தரேன். நீ படிச்சிட்டுப் புனிதாவுக்குக் கொடு. 'வட்டத்திற்குள் சிக்கும் புதிர்கள்'தான் இந்தப் புத்தகம். இந்தச் சொற்புதிர்கள் மொழி அறிவை வளர்க்கக் கூடியவை. ரொம்ப சுவாரஸ்யமாகவும் இருக்குது" என்றாள் காயத்ரி.


"நீங்க ரெண்டுபேரும் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற என் வாழ்த்துகள். நான் கிளம்பறேன்" என்றான் ராஜா.

"ராஜா! நானும் வர்றேன். போய் போட்டிக்குத் தயாராகணும்" என்று கூறியபடி காயத்ரி ராஜாவைப் பின் தொடர்ந்தாள்.

— ரே.

- **இராஜேந்திர பிரசாத், பக். 56, ரூ. 15/- இராஜாராம் மோகன் ராய், பக். 50. ரூ. 15/- எம்.வி. வெங்கெட் ராம், பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, இராயப் பேட்டை, சென்னை - 14.**
- **குழந்தைகளுக்குத் தெனாலிராமன் கதைகள், பாலமுருகன், பக்.128, ரூ. 35/- அழகு பதிப்பகம், ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை – 49.**
- **வட்டத்திற்குள் சிக்கும் புதிர்கள், அப்பாஸ் மந்திரி, பக்.128, ரூ. 24/- குட் புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாக் நம்பர் ஏ.ஏ.96, பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணாநகர், சென்னை – 40.**

குறுக்கெழுத்துப் புதிர்!





இடமிருந்து வலம்

1. நிறங்களில் ஒன்று (4)

2. சிவகாசி ______ இதற்குப் பெயர் பெற்றது (4)

3. நெருப்பில்லாமல் ______ வராது (2)

7. கோலாரில் இந்தச் சுரங்கம் உள்ளது (4)

9. பிரகதீஸ்வரர் ஆலயம் உள்ள இடம் (3)

வலமிருந்து இடம்

4. ஆத்திரக்காரனுக்கு ______ மட்டு (3)

5. தூத்துக்குடியில் கிடைப்பது (3)

6. தமிழக கலைகளுக்கு எடுத்துக்காட்டு (4)

10. சந்திரனுக்கு முதலில் ஆயவுக்கலத்தை அனுப்பிய நாடு (3)

12. பாபரின் மகன் (4)

11. கடை ஏழு வள்ளல்களில் ஒருவர் (2)

13. காஷ்மீரில் விளையும் பழங்களில் ஒன்று (4)

மேலிருந்து கீழ்

1. ஓவியம் என்பதை இவ்வாறும் அழைக்கலாம் (5)

2. யாரிடமும் இதை வைத்துக் கொள்ளக்கூடாது (2)

3. நமது தேசிய விலங்கு (2)

9. முதல்நாள் பாலில் மோர் விட்டால் மறுநாள் இது கிடைக்கும் (3)

கீழிருந்து மேல்

5. பண்டைக்காலத்தில் இதை அடித்துதான் செய்தியை அறிவிப்பர் (3)

7. துணி இதில் நெய்யப்படும் (2)

8. ஆல்கா என்பது ஒருவகை ______ (2)

11. 'வழி'யின் மற்றொரு பெயர் (2)

12. சிங்கத்தின் வேறு பெயர் (2)

13. அமெரிக்க அதிபர்களில் ஒருவரின் முன் பாதி பெயர் (5)

— எஸ். சரண்யா,
பத்தாம் வகுப்பு,
அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.

விடை: 51 ம் பக்கம்

பர்வதன் என்ற ஒரு அரசர் தன் மந்திரியைக் கூப்பிட்டு "பூமியில் எல்லாக் காட்சிகளையும் பார்த்துச் சலித்து விட்டது. ஆகாயத்தில் ஒரு மாளிகை கட்ட ஏற்பாடு செய். அங்கு போய் வசிக்க வேண்டும்" என்றார்.

அந்த அரசர் நல்லவர். தாராள மானவர். ஆனால் முன் கோபி. யார் தன் உத்தரவை மறுத்துப் பேசினாலும் பிடிக்காது. தண்டனை கொடுத்து விடுவார். ஆராயாமல் உத்தரவு போடும் அவரை அவர் போக்கிலேயே சென்று சமாளித்து வந்தார் மந்திரி.

"ஆகட்டும் அரசே! ஆனால் மூன்று மாதங்களாகும். நான் போய் வருகிறேன்" என்று பொக்கிஷ சாலையிலிருந்து பணம் பெற்றுச் சென்றார்.

கிளிகள் கட்டிய அரண்மனை!




காடுகளுக்குப் போய் வேடர்களைச் சந்தித்தார்.

வேடர்களிடம் "எனக்கு நிறையப் பேசும் கிளிகள் வேண்டும். நான் சொல்வதைத்தான் அவை பேச வேண்டும். அதுவும் பறக்கும்போது மட்டுமே பேச வேண்டும். அது பேசுவதற்குத் தகுந்தபடி பணம் கொடுப்பேன்" என்றார்.

அவர்களும் கிளிகளை அவர் சொன்ன படி பேசப் பழக்கி அவரிடம் விற்றார்கள். காடு தாண்டிய பின் மந்திரியின் மகள் வீடு இருந்தது. அந்த வீட்டின் சன்னல், கதவுகள் எல்லாவற்றையும் மூடிவிட்டு கிளிக் கூண்டுகளைத் திறந்து விடுவார்.

மாலதி

அவையும் "ஜல்லி வந்து விட்டதா? செங்கலைத் தண்ணீரில் நனை! இந்திரன் தண்ணீர் தர மாட்டேனென்கிறான்! தளம் போடுகிற அன்று வருணனை ஏவி விடுவானாம்! ஐயோ சனி பார்க்கிறானே! குபேரன் சிமெண்ட் கடனாகக் கேட்கிறான்! வாயு மணலையெல்லாம் வாரி வீசுகிறானே! கருமேகங்கள் திரண்டு வருகின்றதே! கைலாசத்துக்குக் கப்பம் கட்டணுமாம்! பூலோகத்திலே எதற்கு அரசு என்று



தவளையைக் கண்ட சின்னத்தம்பி

தவளை ஒன்று வந்தது
தத்தி தத்திச் சென்றது!

தண்ணீர் தொட்டி கண்டது
தாவி அதிலே குதித்தது!

நீரைக் கண்ட மகிழ்ச்சியில்
நீந்தி நீந்தி மகிழ்ந்தது!

சின்னத் தம்பி வந்தானே
சிரமப் பட்டு பிடித்தானே!

தூரப் போ என்றானே
தூக்கி வெளியே போட்டானே!

கவலை கொண்ட தவளையும்
கணப் பொழுதில் மறைந்ததே!

— க. பழனிச்சாமி,
கெட்டிச்செவியூர்.



அக்னி கேட்கிறான்! ஐயையோ பூலோக அரண்மனை பற்றி எரிகிறதே!" என்றெல்லாம் பேசிவிட்டு கூண்டுகளுக்குத் திரும்பிவிடும்.

மூன்று மாதத்திற்குள் ஏராளமான கிளிகளை நம்பிக்கையானவர்கள் மூலமாக அரண்மனைக்குக் கொண்டு வந்தபின் அரசரை சந்தித்தார் அமைச்சர்.

அமைச்சரைப் பார்த்த அரசர் உற்சாகத்துடன், "ஆகாய மாளிகை கட்டும்பணி எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கேட்டார்.


"மனிதர்களால் ஆகாயத்தில் பணி செய்ய முடியுமா? கிளிகளைத்தான் பழக்கி இருக்கிறேன். வந்து பாருங்கள்" என்று அழைத்தார்.

அரசர் வந்ததும் கிளிக் கூண்டுகள் திறந்து விடப்பட்டன. கிளிகளின் பேச்சைக் கேட்டுத் திகைத்தார் அரசர்.

அதேசமயம் மந்திரியின் ஏற்பாட்டின்படி அரண்மனையின் சிதிலமான பகுதி தீப் பிடித்து எரிந்தது.

அரசர் பயந்துவிட்டார். "மந்திரி! முதலில் தீயை அணைக்க ஏற்பாடு செய்யுங்கள். கிளிகளை ஆகாய மாளிகை கட்டும் வேலையை நிறுத்தச் சொல்லுங்கள். இந்திரன், குபேரன் விரோதமெல்லாம் நமக்கெதற்கு? இருக்கிற சிமெண்ட் மூடைகளைக் குபேரனிடமே கொடுத்து விடுங்கள். சனி பகவானுக்கு நிறைய எள்ளுருண்டை கொடுத்து அனுப்பி விடுங்கள். நிம்மதியாக இருப்பதை விட்டு இதென்ன சிக்கல்!" என்று ஆணையிட்டார்.

சுதந்திரமாகப் பறந்த கிளிகள் திரும்பி வருமா? அவை காட்டுக்குப் போய் விட்டன. தீயும் அணைக்கப்பட்டது. மந்திரியின் புத்திசாலித்தனத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ப்ரியா, பிரசாத் போல் நீங்களும் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கோகுலத்தை அன்பளிப்பாக வழங்கலாமாம்! கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (*6 இதழ்கள்*) ரூபாய் *36/-* ஒரு வருட சந்தா (*12 இதழ்கள்*) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி *:*

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.

கோகுலம் போஸ்டர்




அஜித் அகர்கர்

நெய்யிலிருந்து என்ன வரும்?

ஏன்?

நாங்கள் மின்சார ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தோம். எங்களுக்கு அருகில் ஒரு பெரியவர் நெற்றியில் குங்குமம் வைத்து, காதில் கடுக்கன் போட்டு அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்த என் தங்கை "ஐயையோ! அந்தத் தாத்தா பாய் தானே! பின்னே ஏன் கேர்ள் மாதிரி தோடு போட்டிருக்கார்?'' என்று சத்தமாகக் கேட்டு விட்டாள். எங்கள் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டனர். பெரியவர் மெதுவாகச் சிரிக்க ஆரம்பிக்கவும் பக்கத்திலுள்ளவர்களும் சேர்ந்து சிரித்தனர். அம்மாவும் அப்பாவும் நிம்மதி அடைந்தனர்.

- ப. சௌந்தர்யா, ஐந்தாம் வகுப்பு,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.

என்ன வரும்?

என் அக்கா தயிர் கடைந்து கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டு வால் பையன் வந்து அக்காவிடம் அமர்ந்தான். "என்ன செய்யறீங்க அக்கா?'' என்றான். ''தயிரிலிருந்து வெண்ணெய் கடையறேன்" என்றாள். "பாலிலிருந்துதானே மோர் வருது'' என்றான் அவன். ''பாலிலிருந்து தயிர், தயிரிலிருந்து மோர், வெண்ணெய், வெண்ணெயிலிருந்து நெய் வரும்'' என்றான் பொறுமையுடன் அக்கா. ''நெய்யிலிருந்து என்ன வரும்?'' என்று கேட்டான் அவன். நானும் அக்காவும் ஒரே நேரத்தில் "ஒண்ணும் வராது" என்றோம். "ஏன் வராது? நெய்யிலிருந்து வாசனை வரும்" என்றானே பார்க்கலாம்!

- ராமகிருஷ்ணன்,
அறந்தாங்கி.

உப்புமா

அன்று காலை உப்புமா செய்திருந்தார் அம்மா. என் தம்பி உப்புமா வேண்டாம் என்றான். அம்மா பழைய சாதமும் ஊறுகாயும் வைத்துச் சாப்பிடக் கொடுத்தார். ஒரு வாய் சாதம் சாப்பிட்டவன் "அம்மா உப்புமா" என்று கத்தினான். அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "உப்புமா கொடுத்தால் வேண்டாம்னு சொன்னே. சரின்னு சாதம் கொடுத்தால் உப்புமா கேட்கறியே. என்னதான் நினைச்சிட்டிருக்கே?'' என்றார். "சாதத்தில் உப்புப் போட மறந்துட்டீங்க. அதான் உப்பு







கேட்டேன். நீங்க உப்புமான்னு நினைச்சிக் கிட்டால் நான் என்ன பண்றது?" என்றான் பரிதாபமாக. அம்மாவுக்கே சிரிப்பு வந்து விட்டது.

- சி. ராஜசேகரன்
ராஜபாளையம்.



டெலிபோன்

வீட்டில் டெலிபோன் மணி அடித்தது. அண்ணன் போனை எடுத்தார். அண்ணியின் தம்பிதான் போன் செய்திருந்தார். உடனே அண்ணனிடம் "அவன் ரொம்ப நாளா போன் செய்யலை. முதல்ல வையிங்க (திட்டுங்க)" என்றார் அண்ணி. அண்ணன் பேசிக் கொண்டிருந்ததால் சரியாகக் கேட்க முடியவில்லை. மீண்டும் என்னவென்று கேட்டார். "முதல்ல வையிங்க. அப்புறம் பேசலாம்" என்றார். உடனே அண்ணன் போனை பட்டென்று வைத்துவிட்டார். "ஏங்க வச்சிட்டீங்க?" என்றார் அண்ணி. "நீதானே பேச விடாமல் வைங்க, வைங்கன்னு சொன்னே" என்றார் அண்ணன். "ஐயோ, நான் திட்டச் சொன்னேன்" என்று அண்ணி சொன்னதும் நாங்கள் சிரித்து விட்டோம்.



**- ஆர். நாகராணி, பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.**

என்னாச்சு?

என் அம்மா டீவியில் வரும் சித்தி தொடரை விடாமல் பார்ப்பார். அன்று ஊருக்குச் சென்றிருந்தார். நானும் தம்பியும் தொடரைப் பார்த்துவிட்டுப் படுத்துவிட்டோம். நாங்கள் தூங்கிய பிறகு அம்மா வந்திருக்கிறார். காலையில் அம்மாவைப் பார்த்ததும் "சாரதாவோட அம்மா இறந்துட்டாங்க" என்றான் தம்பி. "எப்படா?" என்று பதட்டத்துடன் கேட்டார் அம்மா. "நேற்றுதான்" என்றான். "ரொம்ப நெருக்கமானவங்களாச்சே. நேற்றே சொல்லக் கூடாது. இப்பவே கிளம்பறேன்" என்றார் அம்மா. "அம்மா நீங்க என்ன சொல்றீங்க? அவன் சித்தி தொடர் பற்றிதான் சொன்னான்" என்றேன் நான். அம்மா நிம்மதியடைந்தார். நானும் தம்பியும் சிரித்து விட்டோம்.

- ஆர். பாலகுமார், செம்பனார் கோயில்.

ஆடு, ஆடு!

எங்கள் ஊரில் கைப்பந்தாட்டம் அணி உள்ளது. சில சமயங்களில் எங்கள் ஊர் அணிக்கும் பக்கத்து ஊர் அணிக்கும் போட்டி நடப்பதுண்டு. அன்று போட்டி ஆரம்பித்தது. மைதானத்தை ஒட்டி மேய்ந்து கொண்டிருந்த ஒரு ஆடு அடிக்கடி குறுக்கே வந்து கொண்டிருந்தது. ஆட்டத்தின் இறுதிக் கட்டம். இரு அணிகளும் சம நிலையில் இருந்தன. அப்போது பக்கத்து ஊர் அணி கேப்டன் பந்தை எடுத்து வீசத்தயாரானார். அந்த நேரம் ஆடு மைதானத்திற்கு அருகே வந்தது. உடனே ஒரு சிறுவன் "ஆடு, ஆடு" எனக் கத்தவும் பந்து வீச இருந்தவர் பந்தை சரியாக சர்வீஸ் பண்ணாமல் சாதாரணமாக வீசிவிட்டார். எங்கள் ஊர் அணி அதைப் பிடித்து அடித்து, வெற்றி பெற்றது. எதிரணிக்கு ஆட்டின்மேல் பயங்கர கோபம்!

**- என். ராஜவேலு, பன்னிரண்டாம்
வகுப்பு, அரசு மேல் நிலைப்பள்ளி,
பெரியதச்சூர்.**

6 ஆளப்பிறந்தவன்

கதை: ராஜி படம்: லலிதா




நம் திட்டப்படி ஜெயசிம்மனைத் தீர்த்துக் கட்டி விட்டேன். நீ உடனே போய் வீரர்களுடன் அவர்களை வரச் சொல்.
உண்மையாகவா?
ஆமாம்!
இருண்ட கானகத்தில் அவர்கள் தயாராயிருக்கிறார்கள். நீ கோட்டைக் கதவுகளைத் திறந்து வைத்திரு.
எல்லாம் தயாராக இருக்குமென்று கூறு. வீரசிம்மனை விரைவில் வரச் சொல். தாமதித்தால் எல்லாம் நாசமாகிவிடும்...
இதோ செல்கிறேன்.
அந்த அயோக்கியன் குப்பனை என்ன செய்கிறேன் பார்! ஒரே குத்தில்...


நண்பா, ஆத்திரப்படாதே! நம் நாட்டுக்கு நேர்ந்துள்ள அபாயத்தை முதலில் நீக்க வேண்டும்.
உடனே மந்திரியிடம் விஷயத்தைக் கூறி...
அது கூடாது. குழப்பம் சதிகாரர்களுக்குச் சாதகமாக முடியும். எச்சரிக்கையாகி விடுவார்கள். இங்கு உனக்கு எவ்வளவு விரோதிகள் இருக்கிறார்கள் என்று தெரியாதபோது... இதைத் திறமையாகச் சமாளிக்க வேண்டும்...
அப்படியானால்?
வீரசிம்மனை விரட்டும் பொறுப்பை என்னிடம் விட்டு விடு. நான் ஒரு அருமையான திட்டம் வைத்திருக்கிறேன். அவர்கள் எப்படி ஓடுகிறார்கள் பார்!



தன் திட்டத்தைச் செயல்படுத்த, தன் கிராமத்தை நோக்கிக் கிளம்பினான் சோமு.
நண்பா! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். நீ உன் குதிரையுடன் அங்கு தயாராக இரு.
அரண்மனையில் யாரிடமும் வீரசிம்மனின் சதித் திட்டத்தைச் சொல்ல வேண்டாமென்கிறான் சோமு. ஏதாவது விபரீதம் நிகழ்ந்தால்...? ம்... சோமுவின் திறமையில் எனக்கு நம்பிக்கை உள்ளது.
மறுநாள் ஜெயசிம்மன் கிளம்பினான்.
நிலா ஒளி வீசுகிறதே! சோமுவின் திட்டம் கைகூடுமா? மரங்களின் நிழல் படிந்த இடங்கள் அச்சத்தைத் தருகின்றன.
(தொடரும்)

பிருந்தாவனம்

கலிபோர்னியா எரிமலைக்குத் தெற்கே ஒரு ஏரி இருக்கிறது. இந்த ஏரியில் உள்ள நீர் கறுப்பாக இருக்கும். அதாவது கரிய மை போன்ற நிறமாகும். இந்த நீரில் ஒரு வெள்ளைத் துணியை நனைத்தால் துணி கறுப்பாக மாறி விடும். இதை நல்ல தண்ணீரில் கழுவினாலும் இந்தக் கறுப்பு மாறாது.

ஜெர்மனியில் புதிதாக வந்துள்ள சைக்கிளை மிதிக்க வேண்டியதில்லை. தானே ஓடும். சூரிய வெயிலை மின்சக்தியாக மாற்றும் கருவி சைக்கிளில் பொருத்தப்பட்டிருக்கின்றது. அதில் தயாரான மின் சார ஆற்றலில் சைக்கிள் ஓடுகிறது. மணிக்கு 45 கி.மீ. வேகத்தில் ஓடும். வெயில் இல்லாத நேரத்தில் காலால் மிதித்து ஓட்டலாம்.

– இ. ரோகிணி, பதினோராம் வகுப்பு, அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

பிரிட்டிஷ் ராணுவத் தளபதிகளில் ஒருவரான 'அல்கமி' என்பவர் சில நாட்கள் இங்கிலாந்துக்கு வெளியே சென்றிருந்தார். அப்போது அவர் மணந்து கொள்ள இருந்த அழகிய பெண் 'எல்லோ ஃபீவர்' என்ற மஞ்சள் காய்ச்சலால் இறந்ததாகக் கருதப் பட்டு குடும்பத்தாரால் சமாதிக்குள் புதைக்கப்பட்டாள். திரும்பி வந்த ஜெனரல் அவளுடைய முகத்தைப் பார்க்க வேண்டும் என பிடிவாதம் பிடிக்கவே புதைத்த இடத்தில் தோண்டி சவப்பெட்டியைத் திறந்து பார்த்தபோது ஜெனரலின் காதலி மூச்சு விட்டபடி உதடுகள் துடிக்க உயிருடன் இருந்தாள். உடனே அவளுக்குப் பானங்கள் வழங்கப்பட்டன. அதற்குப் பிறகு இதே பெண் 41 வருடங்கள் உயிர் வாழ்ந்தாள்.

– ஆர். சுமதி, நாமகிரிப்பேட்டை.

சீன மொழியில் மூங்கிலைக் குறிக்க மட்டும் 270 சொற்கள் உள்ளன.

பத்து வால்ட் பல்பு எரிய எவ்வளவு சக்தி தேவையோ அதே அளவு சக்தியைப் பயன்படுத்தித் தான் மனித மூளையும் செயல்படுகிறது.

– சரஸ்வதி பஞ்சு, திருச்சி.

ஒரு கூட்டத்தில் உள்ள எறும்பு ஒன்று பிரிந்து போய் பல மாதங்கள் கழித்துத் திரும்பி வந்தாலும் மற்ற எறும்புகள் அதை மோப்பத்தினால் கண்டு கொண்டு தங்களுடன் சேர்த்துக் கொள்ளும்.


பனிச் சறுக்கு விளையாட்டில் மிகுந்த திறமை பெற்ற வீரர்கள் உள்ள நாடு சுவீடன்தான். இதற்கு அடுத்த நாடுகளாக நார்வேயும், ரஷ்யாவும் கருதப்படுகின்றன.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

முன்பெல்லாம் எழுதும் போது கால் புள்ளி, அரைப் புள்ளி போன்றவை உபயோகிக்கப்படவில்லை. வார்த்தைகளுக்கு நடுவே இடைவெளி விடும் வழக்கமும் கிடையாது. கிரேக்கர்கள்தான் முதன் முதலில் இடைவெளி விட்டு எழுதத் தொடங்கினார்கள். இத்தாலிய அச்சு வேலைக்காரரான ஆல்டூஸ் மனூஷி



காளைவாலி அதிகமாகப் பெறுபவரே அரசர்!



யஸ்தான் இப்போது இருக்கும் புள்ளி முறையை வகுத்தார்.

– நெ. இராமன்,
சென்னை.

எழுதுகின்றனர்.



சிம்பான்ஸி குரங்குகளைப் பழக்குவது மிக எளிது. மிகவும் புத்திசாலியானது. பொதுவாக அது தரையிலேயே வசிக்கும். தூங்குவதற்காகவே மரங்களில் ஏறும். கூட்டமாகச் சேர்ந்து வாழும். இவை போடும் கூச்சல் கடூரமாக இருக்கும். பழத் தோட்டங்களில் ஒரு கூட்டம் பழங்களைத் தின்று கொண்டிருக்கும் போது இன்னொரு கூட்டம் வெளியே காவல் இருக்கும். யாராவது வந்தால் கூச்சலிட்டு எச்சரிக்கும். மிகவும் பலம் பொருந்தியது இது. வேங்கை, சிறுத்தைகளைக் கூடக் கடித்து விடுமாம்!

– எஸ். மோகன் ராஜ், சீர்காழி.


மலாய் மொழியில் ஒரு அதிசயமுண்டு. அவர்கள், 'பள்ளிக்கூட பஸ்' என்றால், 'பஸ் பள்ளிக்கூடம்' என்றும், 'ராமர் கோயில் தெரு' என்றால், 'தெரு ராமர் கோயில்' என்றும், 'பலா மரம்' என்றால், 'மரம் பலா' என்றும்

'புக்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் 'புத்தகம்' என்று பொருள் கூறுவர். 'புக்' என்ற ஆங்கிலச் சொல் 'BOC' என்ற மரப்பட்டையைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்தது.


– ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்.


ஆங்கிலேயரான ராபர்ட் கிளைவ் என்பவரால்தான் இந்தியாவில், தபால் துறை 1806 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

பிருந்தாவனம்









முதலில் கிழக்கிந்தியக் கம்பெனி கடிதங்கள் மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டன. 1837 ஆம் ஆண்டு முதல் பொது மக்களும் தபால் துறையைப் பயன்படுத்தும் முறை அமுலுக்கு வந்தது. 1852ஆம் ஆண்டு இந்தியா தன் முதல் தபால் தலையைச் சிந்து மாநிலத்தில் (இன்றைய பாகிஸ்தான்) வெளியிட்டது. இந்தியா முழுவதற்கும் ஆன தபால் தலை 1854 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

– எஸ். சபிதா, தூத்துக்குடி.

பஞ்சாப்பில் சுகட் என்றொரு சமஸ்தானம் இருந்தது. 1416ல் சமஸ்தான மக்கள் தம் மன்னனைத் திறமையற்றவன் என்று விலக்கி விட்டனர்.

நாடெங்கிலுமுள்ள நாடக நடிகர்களுக்கு அழைப்பு அனுப்பி ஒரு விழா நடத்தினார்கள். மக்களுடைய கை தட்டல் எந்த நடிகருக்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அவரே தங்கள் அரசர் என்று தீர்மானித்தனர்.

போட்டியில் மியான் மதன் என்பவருக்கு ரசிகர்கள் ஆதரவு நிறைய இருந்ததால், அவரே வெற்றி பெற்று அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 'சுகட்' சமஸ்தானத்தை 26 வருட காலம் ஆண்டார். அவருடைய வம்சத்தினர் 1947 வரை ஆண்டனர்.

– ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிபாளையம்.

1870ல் 'டிரான்ஸ் காண்டினென்டல்' என்கிற நாளிதழ் ரயிலிலேயே வெளிவந்தது. அந்த ரயிலில் மொத்தம் எட்டு பெட்டிகள். அந்த ரயிலில் ஆசிரியர், தொழிலாளர்கள் மட்டுமின்றி அச்சுக் கோர்க்கும் இயந்திரங்கள் எல்லாம் பிரயாணம் செய்தன. இயந்திரங்கள் கோளாறாகவில்லை. பாஸ்டனிலிருந்து சான் பிரான்ஸிஸ்கோ சென்று திரும்பி வரும் வரை இதை ஒரு சுற்றுலா விழாவாகவே கொண்டாடினர்.

– க. விவேக், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிக் பள்ளி, தருமபுரி.

புதிர் உலக விடைகள்!

I முதல் முறை தோற்றவர்கள் D E சென்று D என்பவரை விட்டு விட்டு E என்பவர் திரும்பி வர வேண்டும். இரண்டாவது முறையும் தோற்றவர்கள் EF சென்று F என்பவர் திரும்பி வர வேண்டும். மூன்றாவது முறை ஜெயித்தவர்கள் AB சென்று B, D திரும்பி வர வேண்டும். நான்காவது முறை B, C ஜெயித்தவர்கள் இருவரும் போய் இறங்கிவிட்டு E என்பவர் தோற்றவர் திரும்பி வர வேண்டும். ஐந்தாவது முறை E, F என்ற இருவரும் சென்று F மட்டும் திரும்பி வர வேண்டும். ஆறாவது இறுதி முறையாக தோற்றவர்கள் இருவரும் D, F சென்று இறங்கிக் கொள்ள வேண்டும்.



II

உ	
	உக்ரைன்
	உத்திரமேரூர்
	உட்ரோ வில்சன்
	உதய்ப்பூர்
	உசைன் சாகர்
	உதகமண்டலம்

III

(பெ)ரியது
க(ன்)னம்
வ(சி)யம்
வத்த(ல்)
மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய பொருள் : பென்சில்

IV

1	3	8	6
8	6	1	3
6	8	3	1
3	1	6	8

குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 சி	க	ப்	பு	■	2 ப	ட்	டா	சு
த்	■	■	■	3 பு	கை	■	■	ர
தி	த்	4 பு	■	லி	■	து	த்	5 மு
ர	■	■	■	■	றி	■	■	■
ம்	ப	ற்	6 சி	■	7 த	ங்	க	ம்
■	■	■	8 பா	■	■	■	■	கா
9 த	ஞ்	சை	■	தை	■	யா	ஷ்	10 ர
யி	■	■	ரி	11 பா	■	■	■	பி
ர்	ப	க்	12 அ	■	ள்	பி	ப்	13 ஆ



அழகன்,

9 துப்புக் கிடைத்தது!

நடுநிசியான போது, போன் அலறியது! சோபாவிலிருந்து எழுந்திருக்க முயன்ற பார்வதியைக் கையமர்த்திவிட்டு, சுந்தரம் போன் அருகே சென்றார்.

சுந்தரத்துக்கு வியர்த்தது. உடல் நடுங்கிற்று. கடவுளே, என்ன செய்தி வைத்திருக்கிறாய்? "ஹ-ஹலோ!" அவர் குரலே எழும்பவில்லை.

"யாரு? சுந்தரம்தானே?" என்று எதிர்முனை அதட்டியது.

''ஆ... ஆமாம்!'' என்று மென்று விழுங்கினார்.

''உன் மகன் அழகனை நாங்க கடத்தி வைச்சிருக்கோம்!''

சுந்தரத்திற்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. கடைசியில், அவர் பயந்ததுதான் நடந்து விட்டிருக்கிறது!

"நீங்க யாரு?"

''வீண் கேள்வி கேட்டா எங்களுக்குப் பிடிக்காது! நாங்க

பத்மா ரவிசங்கர்

சொல்றபடி கேட்டால், உன் மகன் உனக்குத் திரும்பக் கிடைப்பான்!'' எதிர்முனை நக்கலாகச் சிரித்துவிட்டு, "பத்திரமா, முழுசா, உயிரோட!" என்றது.

''கேட்கறேன்! கேட்கறேன்!'' என்றார் பதட்டத்துடன்.

"எங்களுக்கு அஞ்சு லட்சம் வேணும்!"

"அஞ்சு லட்சமா?"

"என்ன சுந்தரம் யோசிக்கறே? உன் அருமை வாரிசு அவ்வளவு பெற மாட்டானா?'' மறுபடி கேலிச் சிரிப்பு. "பணம் இல்லைன்னு வீணா டபாய்க்க வேணாம்! இன்னிக்கு உன் தொழிலகத்துல ஓவர் டைம் பட்டுவாடா தினம்! அதுக்கு முன்கூட்டியே பணம் பாங்கிலிருந்து எடுத்து வெச்சிருப்பியே!"

உண்மைதான்! இந்த விஷயம் அந்தக் கடத்தல்காரர்களுக்கு எப்படி தெரியும் என்று வியந்தார் சுந்தரம்.

''ஆச்சரியப்படாதே! எங்களுக்கு எல்லாம் தெரியும்!



செந்தில் குமரன்!

உன் ஒவ்வொரு நடவடிக்கையையும் எங்க ஆள் கவனிச்சுக்கிட்டு இருக்கான்"

சுந்தரம் இடைமறித்து, ''பணத்தை எப்போ கொண்டு வரணும்?''

"எவ்வளவு பாசம்பா! அரை மணி கழிச்சு சொல்றோம்! அதுக்கு முன்னே ஒரு எச்சரிக்கை!"

"எ...என்ன?"

"கடத்தல் பத்தி போலீஸுக்குத் தகவல் தந்தால், உன் மகன் உடல் பீஸ் பீஸா பார்சல்ல வரும்! ஜாக்கிரதை!"


அரை மணி நேரம் சென்றது. போன் வரவில்லை! பதட்டத்துடன் சுந்தரம் நடை

போனைத் தாமதப்படுத்தி, பதட்டத்தைக் கூட்டுவதுதான் அவர்கள் நோக்கம்! கடத்தல் என்பது எவ்வளவு குரூரம் மிக்க செயல்...

பயின்றார். பார்வதி அவ்வப்போது விசிப்பதையும், வெறிப்பதையும் பார்த்தார். கலங்கினார். ஹூம்... யாருக்கு யார் ஆதரவு சொல்வது...?

அந்த இரவு நரகமாக நகர்ந்தது. ஒரு மணி நேரம் ஆயிற்று. ஏன் போன் வரவில்லை? மேலும் அரை மணி சென்றது ஏன்? ஏன்? கேள்வி அவரைக் குடைய, டென்ஷன் கூடியது. தவித்தார்.

சட்டென்று சுந்தரத்துக்குக் காரணம் புரிந்துவிட்டது. போனைத் தாமதப்படுத்தி, பதட்டத்தைக் கூட்டுவதுதான் அவர்கள் நோக்கம்! கடத்தல் என்பது எவ்வளவு



குரூரம் மிக்க செயல்...

அதிகாலை மூன்று மணிக்குக் கடத்தல் காரர்களிடமிருந்து போன் வந்தது! ஐந்து லட்சமும் பழைய நூறு ரூபாய் கட்டுகளாக வேண்டுமாம். நல்லவேளை, நேற்று வங்கியில் கொடுத்தது புதியவை அல்ல! பணக் கட்டுக்களை ஒரு ப்ரீஃப் கேசினுள் வைத்துக் கொண்டு வர வேண்டுமாம். சுந்தரம் தனியாக காரில் காலை ஏழு மணிக்குக் கிளம்ப வேண்டுமாம். எங்கே?

ஊரிலிருந்து ஆறாவது கிலோமீட்டரில் ஒரு கிளைச் சாலை வலப்புறமாகப் பிரியும். அதில் மேலும் மூன்று கி.மீ பயணித்தால், ஒரு சவுக்குத் தோப்பு வரும். அந்த இடம் சுந்தரத்துக்குத் தெரியும். அங்கே ஒரு மரத்தின் மத்தியப் பகுதியில் சிவப்பு பெயிண்டில் பெருக்கல் குறி இருக்கும். அதன் கீழே பணப் பெட்டியை வைத்து விட்டுத் திரும்பிப் பாராமல் சுந்தரம் வந்தால் –

அழகன் வீட்டில் காத்திருப்பானாம்!

பார்வதியின் கண்களில் நம்பிக்கை சுடர் விடத் தொடங்கியது. ஆறுதலாக உணர்ந்தார். 'இறைவா, எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டும்... விடிந்து, பணத்தை வைத்து, அழகனைத் திரும்பவும் எப்போது பார்ப்போம்' என்று அவருக்குள் கிடந்து அடித்துக் கொண்டது.

"இந்த விஷயம் வீட்டு வேலைக்காரர்களுக்குக் கூடத் தெரிய வேண்டாம்; அத்தை வீட்டுக்கு அழகன் சென்றிருக்கிறான் என்று எல்லோருக்குமே சொல்லி விடலாம்" என்றார் சுந்தரம்.

அதிகாலை ஆறு மணி. இன்னும் ஒரு மணி நேரமே பாக்கி. அழைப்பு மணி ஒலித்ததில் சுந்தரம் திடுக்கிட்டார். இந்தநேரத்தில் யாராக இருக்கும்?

வாசலில் செந்தில்! அவருக்குத் திக்கென்றிருந்தது.

"எனக்கு வீட்டுல இருப்பே கொள்ளலை அங்கிள்! அழகன் வந்துட்டானா?"

அழகன் அத்தை வீட்டுக்குச் சென்ற 'கதையை' சொல்லி செந்திலுக்கு விடை கொடுத்தார். ஏமாற்றமடைந்த முகத்துடன் செந்தில் செல்வதைக் கவனித்தார். அவன் நம்பவில்லை என்பது அவருக்குப் புரிந்தது. என்ன செய்வது? பெருமூச்சுடன் வீட்டுக்குள் சென்றார்.

காலை 7 மணி. சிவப்பு பெருக்கல் குறியிட்ட சவுக்கு மரம் முன் சுந்தரம் நின்றிருந்தார். அந்தச் சவுக்குத் தோப்பு ஹோவென்



திருந்தது. வினோத விசில் ஒலியில் காற்று வீச, கண்ணுக்கெட்டிய தூரம் வரை எவரையும் காணவில்லை. சதிகாரர்கள் எங்கே மறைந்திருக்கிறார்களோ? அல்லது இனிமேல்தான் வருவார்களோ?

பணப்பெட்டியை மரத்தின் அடியில் வைத்தார். திரும்பிப் பார்க்காமல் கிளம்பினார். எதிர்பார்ப்புடன் காரைக் கிளப்பினார். வேகமாகப் பயணித்தார். வீட்டை அடைந்ததும் அழகன் தன் வசீகரச் சிரிப்புடன் 'அப்பா!' என்று கட்டிக் கொள்வானா? ஆனால் –

வீட்டில் அழகன் இல்லை! அவசரம் கூடாது. வந்து விடுவான் என்று நம்பிக் கையுடன் காத்திருந்தார். வழியில் தடங்கல் ஏதும் ஏற்பட்டிருக்கும்; அதுதான் தாமதம் என்று சமாதானம் சொல்லிக்கொண்டார்.

நேரம் விரைந்தது. நம்பிக்கை இழக்கத் தொடங்கினார். திரும்பவும் திகில் ஊறியது. கேட்ட பணம் கொடுத்தாயிற்று. ஏன் அழகனை அனுப்பவில்லை? அழகனை ஏதும் செய்திருப்பார்களா? சே! இருக்காது.

மதியம் 2 மணி போன் ஒலித்தது. ''நாங்கதான்!'' என்றது எதிர்முனை, அழுத்தமாக.

''ஏண்டா என் பிள்ளையை அனுப்பலை?'' என்றார் கோபத்துடன் சுந்தரம்.

"கோபப்படாதே சுந்தரம். உன் அருமை வாரிசு இன்னமும் எங்க கைல!

பணப்பெட்டியை மரத்தின்
அடியில் வைத்தார்.
திரும்பிப் பார்க்காமல்
கிளம்பினார்.

மறந்துடாதே!"

"நான்தான் நீங்க சொன்னபடி நடந்துக் கிட்டேனே!" என்றார் தணிந்த குரலில்.

"சரிதான். ஆனா, அழகனை உடனே அனுப்பறதுக்கில்லை! என்ன செய்றது? எங்களுக்கு இன்னும் 'கொஞ்சம்' பணம் தேவையா இருக்கே! எவ்வளவு தேவை? எப்போ, எப்படின்னு மறுபடி போன் பண்றோம்!'' எதிர்முனை லைனைத் துண்டித்து விட்டது!

தற்போது சுந்தரத்துக்கு நம்பிக்கை தொலைந்துபோய்விட்டது. பணத்தை பெற்றுக் கொண்டு எப்படி ஏமாற்றி இருக் கிறார்கள்! கடத்தல்காரர்களிடம் போய் நியாய உணர்வை எதிர்பார்ப்பது எவ்வளவு



''அவன் சுத்தி, வளைச்சுப் பேசறான்!''
''அவ்வளவு பலசாலியா''
— சாயம் வெ. ராஜாராமன்

மடத்தனம்? அழகன் ஒரு பொன் முட்டை இடும் வாத்து! முடிந்த அளவு கறக்கப் பார்ப்பார்கள். இறுதியாக, அழகனை விடுவிப்பார்கள் என்பதும் என்ன நிச் சயம்?

இனி தம்மால் தனியாக அந்த கிரி மினல்களைச் சமாளிக்க முடியாது என்பது அவருக்குத் தெளிவாகி விட்டது. போலீஸ் உதவியை நாட வேண்டியதுதான். அதுவும் ரகசியமாக!

அவர் போனைத் தொட்ட பத்தாம் நிமிடம், இன்ஸ்பெக்டர் பாண்டியன் அவர் வீட்டில் ஆஜராகியிருந்தார்! ஊரின் பெரிய மனிதர் சுந்தரத்துக்கு அவ்வளவு செல் வாக்கு!

கதை முழுவதையும் கேட்ட பாண்டியன், "தப்பு பண்ணிட்டீங்க! முதல்லே நீங்க எங் களை அணுகி இருக்கணும்! ஆல்ரைட். இனி, போலீஸ் இதுல நுழைஞ்சிருக்கிறது அந்த கிட்நாப்பர்ஸுக்குத் தெரியாம ரகசிய மாவே செயல்படறோம்'' என்று உறுதி அளித்தார்.

அரை மணி கழித்து ஒரு உபகரணத் துடன் திரும்ப வந்தார் பாண்டியன். அதை போனுடன் இணைப்பு ஏற்படுத்தினார்.

"இனி உங்க போன் உரையாடல் இதுல பதிவாகும்!"

இன்ஸ்பெக்டர் சென்றபின், செந்தில் வந்தான்.

"அங்கிள்! அழகன் என் உயிர் நண்பன்! என்ன நடந்தது? அழகன் எங்கே? உண் மையைச் சொல்லுங்க. ப்ளீஸ்..''

செந்தில் கண் கலங்கியதைக் கண்டு சுந் தரம் நெகிழ்ந்தார். உண்மையைச் சொன்



"அதிர்ஷ்டம் வந்தா பெரும் பணக்காரனாத்தானே ஆவாங்க... அவர் மட்டும் எப்படி குருடனா ஆனார்?"

"அவருக்கு வந்தது குருட்டு அதிர்ஷ்டமாம்!"

— ஓரியூர் கே. சேகர்

னார். செந்தில் அதிர்ச்சியில் பேச்சிழந்தான்.

மாலை 6 மணி. போன் ஒலித்தது. எதிர்முனையில் அந்தச் சதிகாரனின் குரல்தான்!

"எங்களுக்கு இன்னும் பணம் வேணும்!"

சுந்தரம் அமைதியாக, "எவ்வளவு?" என்றார்.

"இருபது லட்சம்! அதுவும் நாளைக்கு மாலையே தரணும்!"

"தர்றேன்! என் மகன் – "

"நான் சொல்றதைக் கேட்டு நீ செயல்பட்டா, இந்தமுறை ரிலீஸ் செய்துருவோம்!"

கவனமானார்.

"நாளை உன் தொழிலகத்துக்குப் பகல் ஷிஃப்ட் மட்டும் போதும்! மாலை ஐந்து மணியிலிருந்து தொழிலகம் இயங்கக் கூடாது. அங்கே எவருமே இருக்கக் கூடாது. புரியுதா சுந்தரம்?"

"புரியுது."

"சரியா மாலை ஐந்துக்கு அந்தச் சவுக்குத் தோப்பில் அதே இடத்துல பணப் பெட்டியை வெச்சுட்டு வீட்டுக்கு வந்து வெயிட் பண்ணு சுந்தரம். பணப் பெட்டி எடுத்துக்கிட்ட எங்க ஆள் அரை மணி கழிச்சு 'ஆல் க்ளியர்னு' இன்னொரு கூட்டாளிக்கு சிக்னல் அனுப்புவான். அழகனை ஒரு இடத்துலருந்து அவன் பிக்கப் பண்ணிக்கிட்டு உடனே கிளம்புவான். புரியுதா? அவ்வளவுதான். ஆறரை மணிக்கு நீ தனியா புறப்பட்டு உன் ஃபாக்டரிக்குப் போ. அங்கே உன் மகன் அழகன் உன் வரவிற்காகக் காத்திருப்பான்! இதுதான் எங்க கடைசி போன் கால்..."

சுந்தரத்துக்கு வியர்த்தது. அதேசமயம் –

திருவள்ளுவர் தெருவை செந்தில் நெருங்கிக் கொண்டிருந்தான்! குமரன் அவனை இட்டுச் சென்றது. நாயின் மோப்ப மூக்கு விடைத்துக்கொண்டது.

மாலை வெளிச்சம் மங்கத் தொடங்கி இருந்தது. செந்தில் மிகவும் கவலையில் ஆழ்ந்திருந்தான். திடீரென்று இந்த ஊருக்கு என்ன வந்து விட்டது? கையில் வெடி குண்டுடன் மூன்று சதிகாரர்கள் உலவுகிறார்கள். எவரோ அழகனைக் கடத்துகிறார்கள்.

தெருமுனையில் செந்தில் நின்றுகொண்டான். திருவள்ளுவர் தெரு கடைசி வரை முகர்ந்து பார்த்துவிட்டுக் குமரன் திரும்பி வந்தது. பின், சரேலென்று பக்கவாட்டுச் சந்தினுள் பிரவேசித்தது. ஆர்வமுடன் செந்தில் பின் தொடர்ந்தான்.

அது ஒரு முட்டுச் சந்து. ஒரே குப்பைக் கூளமாக இருந்தது. இங்கு ஏன் குமரன் புகுந்துள்ளது? தரையை உற்றுக் கவனித்த

கடத்தல்காரர்களிடம் போய் நியாய உணர்வை எதிர்பார்ப்பது எவ்வளவு மடத்தனம்? அழகன் ஒரு பொன் முட்டை இடும் வாத்து!

செந்தில் மலர்ந்தான். மண் தரையில் கார் டயர் பதிவு தெரிந்தது! இந்தத் தெருவில் எவரிடமும் கார் வசதி இல்லை. அதுவும் இந்த அழுக்குச் சந்தில் ஒரு கார் வரக் காரணம் என்ன? ஆக, இந்த இடத்தில் காரில் வந்து காத்திருந்து அழகனைக் கடத்தி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

ஒருமுறை குமரன் குரைத்தது! செந்தில் சட்டென்று நிமிர்ந்தான். குப்பையிலிருந்து குமரன் வாயில் எதையோ கவ்விக் கொண்டு வருவதைக் கவனித்து உற்சாகமானான். கவ்விக் கொண்டு வந்த பொருளை அவன் காலடியில் போட்டது. அது –

பாதி புகைக்கப்பட்டிருந்த ஒரு பழுப்பு நிறச் சுருட்டு! அதன் முனையில் தங்கச் சரிகை நூல் சுற்றப்பட்டிருந்தது!

(அடுத்த இதழில் முடியும்)

கீழே பத்து கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இதில் ஒரு விடை சரியானது. மீதி இரண்டு தவறானவை. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, முகவரி கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி **28.2.2001**



கோகுலம் க்விஸ்!

1. கேரள முதல்வர் யார்?
1. ஜோதிபாசு, 2. ஈ.கே. நாயனார் 3. அந்தோணி

2. அண்மையில் சாஹித்ய அகாதமி விருது பெற்ற தமிழர் யார்?
1. ஜெயகாந்தன், 2. கலைஞர், 3. தி.க. சிவசங்கரன்.

3. கிரிக்கெட் ஆட்டக்காரர் அடித்த பந்தை எதிரணியினர் தேடி எடுக்க முடியவில்லையென்றால், அவருக்கு எத்தனை ரன் கிடைக்கும்?
1. 6 ரன், 2. ஒன்றும் இல்லை. 3. 4 ரன்

4. தற்போது லியாண்டர் பயஸ் உடன் இணைந்து டென்னிஸ் ஆடிவரும் வீரர் யார்?
1. ரமேஷ் கிருஷ்ணன், 2. மகேஷ் பூபதி, 3. விஜய் அமிர்தராஜ்.

5. நம் உடலில் உள்ள பெரிய உறுப்பு எது?
1. கால், 2. தலை, 3. தோல்

6. சிறப்பு ஆஸ்கார் விருது பெற்ற இந்தியர் யார்?
1. மிருணாள்சென், 2. பாலசந்தர், 3. சத்யஜித்ரே.

7. நூறு மைல் தூரம் வரை தண்ணீர் குடிக்காமலேயே பயணம் செய்யக் கூடிய விலங்கு எது?
1. ஒட்டகச்சிவிங்கி, 2. குதிரை, 3. ஒட்டகம்.

8. காகிகதத்தை மடித்து உருவங்கள் உருவாக்கும் 'ஒரிகாமி' கலை எங்கே தோன்றியது?
1. சீனா, 2. தாய்லாந்து, 3. ஜப்பான்

9. சந்திரனுக்கு முதலில் விண்வெளி ஓடத்தை அனுப்பிய நாடு?
1. ரஷ்யா, 2. அமெரிக்கா, 3. கொரியா

10. கபடி எந்த நாட்டிற்குச் சொந்தமான விளையாட்டு?
1. இலங்கை, 2. பாகிஸ்தான், 3. இந்தியா.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97

இரண்டாயிரமாவது ஆண்டில் இந்தியாவைப் பொறுத்த வரை விளையாட்டுத் துறையில் மல்லேஸ்வரியின் சாதனையைத் தவிர குறிப்பிடத்தக்கது எதுவும் இல்லை. இந்த ஆண்டு பிறக்கும்போதே எல்லோருக்கும் சந்தோஷத்தை அளித்துவிட்டது. அதற்குக் காரணமானவர் விஸ்வநாதன் ஆனந்த்.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஃபிடே (உலக செஸ் கூட்டமைப்பு) நடத்திய போட்டியில் கலந்துகொண்டு உலக சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார் ஆனந்த்.

31 வயதான ஆனந்த் உலக சாம்பியன் பட்டம் பெற்ற முதல் இந்தியர் என்பது மட்டுமல்ல; முதல் ஆசியரும்கூட!

ஆனந்தின் முதல் குரு அவரது அம்மாதான். அவர்தான் இளம் வயதிலிருந்தே செஸ் விளையாட்டின்மீது ஆனந்துக்கு ஆர்வம் ஏற்பட வைத்துப் பயிற்சியளித்து வந்திருக்கிறார். பிறகு பெங்களூரில் முறைப்படி பயிற்சி எடுத்துக் கொண்டார் ஆனந்த். 17வது வயதில் உலக ஜூனியர் செஸ் சாம்பியன் ஆனார். 19வது வயதில் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர்! படிப்படியாக உழைப்பாலும், விடா முயற்சியாலும் முன்னேறி வந்த ஆனந்த் இன்று மிக உன்னத நிலையை அடைந்து விட்டார்.

செஸ் ஆஸ்கார் விருதுகள், பத்மஸ்ரீ, அர்ஜுனா போன்ற விருதுகள் ஏற்கனவே ஆனந்திற்குப் பெருமை சேர்த்துள்ளன.



இது தவிர ஸ்போர்ட் ஸ்டார் இதழின் மில்லெனியம் விருதும் இவருக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

உலக சாம்பியன் பட்டம் பெற்ற 15வது நபர் ஆனந்த். உலக தர வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். உலக சாம்பியன் ஆனது மூலம் 3 கோடி



• அகர்கர்

உலகை



* ஸ்டீவ் வாஹ்

ரூபாய் பரிசாகக் கிடைத்திருக்கிறது.

இன்னும் 2,3 ஆண்டுகளில் செஸ் அகாதமி துவங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார் ஆனந்த். அதில் மேலும் பல ஆனந்த்கள் உருவாவார்கள் என்பதில் சந்தேகமில்லை!

இந்திய, - ஜிம்பாப்வே அணிகளுக்கிடையே கடந்த மாதம் ராஜ்கோட்டில் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடை

சாம்பியன் ஆனந்த்!

பெற்றது. இந்தப் போட்டியை யாராலும் அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாது. ஆல் ரவுண்டரான அஜித் அகர்கர் களம் இறங்கி அதிரடியாக விளையாடினார். இருபத்தியோரு பந்துகளில் 50 ரன்களைக் குவித்தார். 1983 ஆம் ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக கபில்தேவ் இருபத்தியிரண்டு பந்துகளில் 50 ரன்கள் எடுத்ததுதான் இதுவரை சாதனையாக இருந்தது. அச் சாதனையை 17 ஆண்டுகளுக்குப் பின் அஜித் அகர்கர் முறியடித்திருக்கிறார்.

உலகிலேயே குறைந்த பந்துகளில் அதிக ரன்களைக் குவித்தவர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்திருப்பவர் இலங்கை அணியின் கேப்டன் ஜெயசூர்யா. இவர் 16 பந்துகளில் 50 ரன்களை எடுத்திருக்கிறார். அகர்கர் ஐந்தாவது இடத்தைப் பிடித்திருக்கிறார். இருபத்தி மூன்று போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிலும் சாதனை படைத்து விட்டார் அகர்கர்!

மேற்கிந்தியத் தீவுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் 5 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஐந்தாவது டெஸ்ட் போட்டி சிட்னியில் நடந்தது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் ஸ்டீவ் வாஹ் தனது 24வது சதத்தைப் பூர்த்தி செய்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் ஐந்தாவது இடத்துக்கு ஸ்டீவ் வாஹ் முன்னேறியிருக்கிறார். ஏற்கனவே ஐந்தாவது இடத்தில் சச்சின் டெண்டுல்கர் இதே 24 சதங்களுடன் இருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் எடுத்தவர்கள்

I. கவாஸ்கர் (இந்தியா) – 34
II. டான்பிராட்மேன் (ஆஸ்திரேலியா) – 29
III. ஆலன்பார்டர் (ஆஸ்திரேலியா) – 27
IV. கேரி சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்) – 26
V. சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) – 24
VI. ஸ்டீவ் வாஹ் (ஆஸ்திரேலியா) – 24

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு

தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பி வைப்பதிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். இந்த மாதப் போட்டி: பறவை சம்பந்தப்பட்ட விடுகதைகள். அடுத்த மாதமும் மேற்கண்ட மாவட்டங்களுக்குப் போட்டி தொடரும். மற்ற மாவட்டங்களுக்கும் இந்த வாய்ப்பு வரும். காத்திருங்கள்.



• நெல்சன் மண்டேலா

சூரியக் குடும்பத்தில் மிகப் பெரிய கோள் வியாழன். இந்தக் கிரகத்திற்கு 16 துணைக் கோள்கள் அதாவது சந்திரன்கள் உள்ளன. இந்த 16 கோள்களில் கனிமேடு, யுரோபா, காலிஸ்டோ ஆகியவை பற்றி விண்ணில் சுற்றி வரும் கலிலியோ விண் கலம் ஆராய்ந்து புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. இதில் கனிமேடு துணைக் கிரகத்தில் பெரிய கடல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கனிமேடு துணைக் கோள் புதன் மற்றும் புளூட்டோ கிரகங்களை விடப் பெரியது. ஏராளமான பனிமலைகளைக் கொண்டது.

கலிலியோ விண்கலம் கடந்த மே மாதம் கனிமேடுக்கு அருகே சென்றபோது விண்கலத்தில் உள்ள காந்தப்புலம் கொண்ட கருவி கடல் இருப்பதை உறுதி செய்துள்ளது. 90 முதல் 120 மைல் வரை பனிக்கட்டிப் படிவுகள் இருப்பதாகவும் அதற்கு அடியில் கடல் இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



• கோஹினூர் வைர கிரீடம்


நூற்றாண்டு விழா!

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆல்பிரட் நோபல். இவர் 1896 ஆம் ஆண்டு டிசம்பர் 10ந் தேதி இறந்தார். 1901 ஆம் ஆண்டு முதல் அவரது நினைவு நாளான டிசம்பர் 10ந் தேதி நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நோபல் பரிசின் நூற்றாண்டு. இதையொட்டி. நார்வேயில் உள்ள நோபல் நிறுவனம் சிறப்பான விழாவுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. இந்த விழாவில் பங்கேற்க இதுவரை சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்களுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. இதில் நெல்சன் மண்டேலா, எஃப். டபிள்யு.டி. கிளார்க், யாசர் அராபத், மிகையேல் கோர்பச்சேவ், தலாய்லாமா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

24 மணி கடிகாரம்

1 முதல் 24 மணி நேரத்தையும் காட்டும் கடிகாரத்தைச் சீன விவசாயி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். 12 மணி நேரத்துக்குப் பிறகு வரும் நேரத்தை 13 முதல் 24 மணி நேரமாகக் கணக்கிடுகிறோம். இதைத் தவிர்க்கும் பொருட்டு இக்கடிகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வடகிழக்கு ஜிலின் மாகாணத்தில் வசிக்கும் குவான்தான் இச் சாதனையின் சொந்தக்காரர். இதை உருவாக்க 15 ஆண்டுகள் ஆனதாம்! ஒருமுறை சீனத் தொலைக்காட்சியில் மாலை 5.40 என்பதை 17.40 என்று கூறியபோது அவரது மகன் குழப்பமடைந்திருக்கிறான். இந் நிகழ்ச்சியே கண்டுபிடிப்புக்குத் தூண்டுகோலாக அமைந்தது என்கிறார் குவான். இக் கடிகாரத்தில் சீன வருடங்கள், சீன விழாக் காலங்கள், சூரிய உதயம், அஸ்த


• ஜார்ஜ் டபிள்யு புஷ்

கோகுலம் நியூஸ்

மனம் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

கறுப்புப் பெட்டி

விமானங்களில் கறுப்புப் பெட்டி இருப்பது போன்று கப்பல்களிலும் கறுப்புப் பெட்டி அவசியம் இருக்க வேண்டும் என சர்வதேச கடல் சார் அமைப்பு (ஐ.எம்.ஓ) வகுத்துள்ளது. இதன்படி 2002 ஜூலையிலிருந்து கட்டப்படும் கப்பல்களில் கறுப்புப் பெட்டி பொருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது. பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல்களில் கறுப்புப் பெட்டி பொருத்தப்பட உள்ளது. விபத்து ஏற்படும்போது விபத்து பற்றிய தெளிவான விவரங்களை அறிய இந்தக் கறுப்புப் பெட்டி உதவும்.

புதிய அதிபர்

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜார்ஜ் டபிள்யு புஷ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் மகனாவார். இவர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். பில் க்ளிண்ட்டனின் ஜனநாயகக் கட்சி தேர்தலில் தோல்வி அடைந்துவிட்டது.

வைரம்

நூறாண்டுகளுக்குமுன் தென்னிந்தியச் சுரங்கம் ஒன்றில் கோஹினூர் வைரம் தோண்டி எடுக்கப்பட்டது. இது 108 காரட் கொண்டது. இதை அப்போது இந்தியாவை ஆண்ட இங்கிலாந்து கைப்பற்றிக் கொண்டது. அந்த வைரம் தற்போது எலிசபெத் ராணியின் மகுடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. இந்த வைரத்தை விற்றால் உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் இரண்டரை நாட்களுக்கு உணவு தரலாமாம்! அந்த அளவுக்கு விலை மதிப்பு மிக்கது இது. இந்த அரிய பொக்கிஷத்தை மீண்டும் இந்தியாவிடமே ஒப்படைக்க இந்திய கலாசாரப் பாரம்பரிய மீட்டுச் சங்கம் திட்டமிட்டுள்ளது.

ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு யானை. யானைக் கூட்டமாகவோ, தனித்தோ அல்லது அலங்காரம் செய்த யானையாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். யானை கறுப்பாக இருந்தாலும் சுற்றியுள்ள பகுதிகளை வண்ணத்தில் கொண்டு வர முடியும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதுங்கள்.

கடைசி தேதி: 20.2.2001



சேரியில் பிறந்தவர் சோகாமேளர். மது அருந்துவதும், மாமிசம் சாப்பிடுவதும் தவறு என்று போதித்து பலரையும் திருத்தியவர். பாண்டுரங்கன் மேல் மிகவும் பக்தி கொண்டவர். அவருக்கு இனிமையான குரல். மனம் உருகி பஜனை செய்வார். இது பல சோம்பேறிகளுக்குப் பிடிக்கவில்லை.

சோகாமேளரின் மனைவியும் மிகவும் நல்லவள். இருவரும் சந்திரபாகா நதியின் அக்கரையில் வசித்தனர். அவர்கள் ஏகாதசி விரதம் இருப்பது வழக்கம். ஏகாதசி இரவில் விடிய விடிய பஜனை செய்வார்கள்.

மறுநாள் துவாதசியில் அதிகாலை நீராடி நெல்லிக்காய் பச்சடியும், அகத்திக்கீரைத் துவட்டலும் செய்தாள் மனைவி. சோகாமேளர் நீராடி சாப்பிட அமர்ந்த

உப்பிய கன்னம்!



போது,

"பாரணை பண்ண நானும் வரலாமா?" என்ற குரல் கேட்க இருவரும் திரும்பிப் பார்த்தனர். சங்கு, சக்கர, பீதாம்பர தாரியாய் ஸ்ரீ கிருஷ்ணன் நின்றிருந்தார்! பரபரப்போடு அவரை அழைத்து வந்து பாதம் அலம்பி மணையில் அமர்த்தினார் சோகாமேளர். தலைவாழை இலை போட்டு நீர் தெளித்துப் பரிமாறினாள் அவர் மனைவி. இருவருக்கும் சொல்ல முடியாத ஆனந்தம்!

''நீங்கள் வருவது முன்கூட்டியே தெரிந்திருந்தால் இன்னும் இரண்டு வகை காய்கறி சமைத்திருப்பேன்'' என்று தாபத்தோடு கூறினாள் சோகாமேளர் மனைவி.

''அதற்கென்ன! இனி ஒவ்வொரு துவாதசியும் இங்கேயே சாப்பிட வந்து விடுகிறேன்'' என்றார் ரங்கன். சொன்னது போல ஒவ்வொரு துவாதசியும் சோகா மேளர் வீட்டிற்குச் சாப்பிடச் சென்றார்.

ஒரு துவாதசி அன்று எழுந்திருக்கும்போது சூரியன் உதயமாகி இருந்தான். சோகாமேளர் படபடப்பாக ''தூங்கி விட்டோமே! பண்டரி நாதர் வந்து விடுவாரே! சீக்கிரம் குளித்துவிட்டு சமையலை முடி'' என்றார். பதட்டத்தில் குரல் உயர்ந்தது.

அப்போது தெருவில் போய்க் கொண்டிருந்த ஒரு அந்தணர், ''பண்டரிநாதர் இவர் வீட்டில் சாப்பிட வருகிறாராமா? தெய்வத்தையே கேவலப்படுத்துகிறானே'' என்றபடி ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு அரசரிடம் முறையிட்டார்.

அரசர் சோகாமேளரை அழைத்து, ''பண்டரிநாதர் உன் வீட்டில் சாப்பிட வருவதாக ஏன் பொய் சொன்னாய்?'' என்று விசாரித்தார்.

''நான் சொன்னது முற்றிலும் உண்மை. பாண்டுரங்கர் துவாதசி தோறும் என்னோடு உணவருந்துகிறார்'' என்றார் சோகாமேளர்.

அரசர் சோகாமேளரின் பேச்சை நம்பாததால் பொய்ப் பிரசாரம் செய்த குற்றத்திற்காக அவரைப் பசு நிரையில் தள்ளும்படி உத்தரவிட்டார்.

காட்டில் காளைகளும், பசுக்களும்,

ஆர். பொன்னம்மாள்



அந்தச் சமயம் தெருவில் சென்று கொண்டிருந்த கோவில் அர்ச்சகர் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். அவருடைய கண்களுக்கு பகவான் தென்படவில்லை. உடைந்த தயிர் சட்டியும், கையைப் பிசைந்துக் கொண்டிருந்த சோகாமேளர் மனைவியும், சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சோகாமேளரும், பரிமாறி இருக்கும் மற்றொரு இலையும்தான் தெரிந்தன.

விடுவிடுவென்று கோபத்தோடு உள்ளே வந்தார். ''ஏ! பைத்தியமே! உன் புரளிக்கு எல்லையே இல்லையா?'' என்றபடி சோகாமேளரைத் தூக்கி நிறுத்தி கன்னத்தில் அறைந்தார். பிறகு சந்திரபாகா நதியில் நீராடிவிட்டு ஆலயத்துக்குச் சென்றார்.

சன்னதியைத் திறந்தவர் திடுக்கிட்டு நின்றுவிட்டார். விக்ரகத்தின் இடது கன்னம் உப்பி இருந்தது. அணிவித்திருந்த ஊதா நிறப் பீதாம்பரம் முழுவதும் தயிர்க்கட்டிகள்!

அரசருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

''பக்திக்கு ஜாதியோ, இனமோ கிடையாது. சோகாமேளரைக் கோவிலுக்குள் வரவிடாதது முதல் குற்றம். ஊரை விட்டு ஒதுக்கியது இரண்டாவது குற்றம். கோயில் மரியாதைகளோடு அவரை அழைத்து வாருங்கள்'' என்று அரசர் ஆணையிட்டார்.

அதன்படி அர்ச்சகர் சோகாமேளர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அவரைப் பண்டரி நாதர் கோவிலுக்கு அழைத்து வந்தார். சன்னதிக்குள் சோகாமேளர் வந்ததும் விக்ரகத்தின் வீக்கம் மறைந்தது.

சோகாமேளரைப் பார்த்து கள்ளச் சிரிப்பு சிரித்தார் பாண்டுரங்கர். ஊர் மக்களும் அவருடன் பஜனையில் கலந்து கொண்டனர்.

கன்றுகளுமாக நிறைந்த மந்தையில் கை கால்கள் கட்டப்பட்டு தள்ளப்பட்ட சோகாமேளர், "கோவர்த்தன மலையையே சுண்டு விரல் நுனியில் நிறுத்தியவனுக்கு என்னைக் காப்பது பெரும் பாரமா?" என்றெல்லாம் கூறி பஜனை செய்தார்.

சோகாமேளர் கிருஷ்ணரின் உதவியால் வீட்டிற்கு வந்தார்.

அந்த நாளில் உத்தரத்தில் உறிகட்டி அதில்தான் தயிர், வெண்ணை முதலானவற்றை வைப்பார்கள். கிருஷ்ணர் கோபியர் வீட்டு உறிகளிலுள்ள சட்டி, பானைகளை உடைத்ததாலேயே கோகுலாஷ்டமிதோறும் பெருமாள் கோவில்களில் உறியடி உற்சவம் நடைபெறுகிறது.

சோகாமேளர் மனைவி உறியிலிருந்து தயிர்ப்பானையை எடுக்கும்போது கண்ணன் மாயையால் கை தவறி பானை கீழே விழுந்தது. தயிர் கட்டிகள் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஊதா நிற பீதாம்பரமெங்கும் சிதறின.

''பகவானுடைய பீதாம்பரத்தை வீணாக்கி விட்டாயே! பார்த்து எடுக்க வேண்டாமா?'' என்று மனைவியைக் கடிந்துக் கொண்டார் சோகாமேளர்.

HOW TO WIN FRIENDS?
- GRANDMA WORM



MYSTERY OF THE
MISSING DIAMOND
- SHORT STORY

A VISIT TO ZOORASIA
- POSTER WITH ARTICLE

IS HEARTBURN RELATED TO THE HEART?
-Hello Doctor!

KID'S MOVIE: ADULTS LOVE IT!
- COVER STORY

FEBRUARY 2001

GOKULAM
The monthly magazine for children

Rs.6/-


47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

மறக்க முடியாத மனிதநேயம்!



முகம்

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவன் தூங்கி விழுந்து கொண்டிருந்தான். அவனை எழுப்பி, "வெளியில் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா" என்று அனுப்பி வைத்தார் ஆசிரியர். சிறிது நேரத்தில் இன்னொரு மாணவனைப் பார்த்து, "நீயும் போய்



முகத்தைக் கழுவிட்டு வா" என்றார். அவனோ, "சார் நான் தூங்கலை. பாடத்தை நன்றாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்" என்றான் அழுகையுடன். "நீ தூங்கினேன்னு நான் சொல்லலை. முகத்தில் இங்க் ஒட்டியிருக்கு. அதைத்தான் கழுவிட்டு வரச் சொன்னேன்" என்றபடி சிரித்தார் ஆசிரியர். அவன் முகம் கழுவச் சென்றான்.

– ஆர். பாலகுமார், எட்டாம் வகுப்பு, மாடர்ன் மெட்ரிக் பள்ளி, செம்பனார்கோவில்.

அணு எண்?

வேதியியல் பாட வேளை. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். என் அருகில் அமர்ந்திருந்த மோகனும் முபாரக்கும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். இதை ஆசிரியர் பார்த்து விட்டார். அவர்கள் இருவரையும் எழுப்பி, "குரோமியத்தின் அணு எண் என்ன?" என்று கேட்டார். ஒருவன், "6" என்றும் இன்னொருவன், "8" என்றும் கூறினார்கள். ஆசிரியர் கோபத்துடன், "இது தான் குரோமியத்தின் அணு எண்ணா?" என்று கேட்டார். "இல்லைங்க சார். எங்க குடும்பத்துல எத்தனை பேர் என்று கேட்டீங்கன்னு நினைச்சோம்" என்றனர் இருவரும். நாங்கள் சிரித்து விட்டோம். ஆசிரியர் எழுந்து போய் விட்டார். காரணம் பாட வேளை முடிந்து விட்டது.

– ஆர். மாரிமுத்து, அரசு மேல்நிலைப் பள்ளி, அனுமந்தை.

சிரை என்றால்...



அறிவியல் ஆசிரியர் இதயத்தின் இயக்கம் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். 'இதயத்திற்கு அசுத்த ரத்தத்தைக் கொண்டு வருவது தமனிகள்' என்றும் 'சுத்த ரத்தத்தை உடலின் மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்வது சிரை' என்றும் விளக்கினார். அப்போது பாடத்தைக் கவனிக்காமல் எதையோ தேடிக் கொண்டிருந்தான் என் நண்பன். அவனை எழுப்பி, "சிரை என்றால் என்ன?" என்று கேட்டார் ஆசிரியர். "குற்றம் செய்தவர்களை அடைத்து வைத்திருக்கும் ஒரு அறை சார்" என்றான் அவன். நாங்கள் சிரித்து விட்டோம். ஆசிரியர் இருபது தடவை எழுதும்

படிக் கூறி விட்டார்.


– தே. இளங்குமரன், கருப்பனூர் அஞ்சல், திருப்பத்தூர்.

மறக்க முடியாது!




தீபாவளிக்கு மறுநாள் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாகப் பள்ளிக்குச் செல்வது வழக்கம். ஆனால் இந்தத் தீபாவளிக்கு மறுநாள் எனக்குப் புத்தாடை அணிய மனமே இல்லை. காரணம், தீபாவளிக்கு இரண்டு நாட்கள் முன்புதான் எங்கள் பள்ளியில் படித்த ஏழாம் வகுப்பு மாணவி பேருந்து விபத்தில் இறந்துவிட்டாள். எனவே நான் வழக்கம்போல் சீருடை அணிந்து சென்றேன். பள்ளிக்குச் சென்றதும் எனக்கு ஒரே வியப்பு. பள்ளி மாணவர்கள் அனைவருமே சீருடையில் வந்திருந்தனர். யாரும் சொல்லாமல் ஒட்டு மொத்தமாக மனிதநேயத்தை வெளிப்படுத்திய விதம் என்னால் மறக்க முடியாது.

– மே.கி. சிந்துஜா, பன்னிரண்டாம் வகுப்பு, பெருந்தொழுவு.



அழுகை

எங்கள் வகுப்பில் பட்டி மன்றம் நடத்தினோம். பட்டிமன்றத்தின் தலைப்பு 'சமுதாயம் முன்னேற துணை செய்வது கல்வியா? அல்லது தொழிலா?' என்பதே. கல்வியின் சார்பாக மூவரும் தொழிலின் சார்பாக மூவரும் பேசினர். இறுதியில் 'கல்வியே துணை செய்கிறது' என தீர்ப்பு வழங்கினார் நடுவர். உடனே தொழில் சார்பாக பேசிய ஒருவன் வெற்றி பெறவில்லையே என்பதற்காக அழுதான்.



ஆறு பேரில் அவன்தான் சிறப்பாகப் பேசி கைதட்டலைப் பெற்றவன். ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு, "இதையெல்லாம் விளையாட்டாக எடுத்துக்கணும். ஏதாவது ஒரு அணி தான் வெற்றி பெற முடியும்" என்று ஆறுதல் கூறினார்.


– பி. தினகரன், ஒன்பதாம் வகுப்பு, ஏ.வி.எம். மேல்நிலைப் பள்ளி, பேராவூர்.

ஆண்டு விழா!

நான், எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள இஸ்லாமியப் பள்ளியில் குர்ஆன் பயில்கிறேன். சமீபத்தில் எங்கள் இஸ்லாமியப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றதால், அன்று நான் பள்ளிக்குச் செல்லவில்லை. மறுநாள் சென்ற போது ஆசிரியர், என்னிடம், "நேற்று ஏன் வரலை பாத்திமா?" எனக் கேட்க, நான் ஆசிரியரிடம், "நான் படிக்கும் பள்ளியில் நேற்று ஆண்டு விழா சார்! பல பரிசுகள் பெற்றேன்!" என்றேன். ஆசிரியர், "என்ன உளர்றே? நேற்று நம் பள்ளியில் ஆண்டு விழாவா?" எனத் திகைப்புடன் கேட்க, நான், "சார்! நான் குர்–ஆன் பயிலும் இஸ்லாமியப் பள்ளியில் நேற்று ஆண்டு விழாவென சொன்னேன்'' என்றதும் ஆசிரியர் உட்பட வகுப்பே சிரித்தது.


– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.





முதல் பரிசு :
என்.எஸ். கோபால்,
பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்
பள்ளி, இராஜா நகரம் கிழக்கு,
திருவள்ளூர் மாவட்டம்.

இரண்டாம் பரிசு :
இரா. சங்கர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
சித்தரேவு,
திண்டுக்கல் மாவட்டம்.




ஓவியப்போட்டி முடிவுகள்

டிசம்பர் இதழில் ‘வாத்து’ என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம்: அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



மூன்றாம் பரிசு :
ராகவேந்திரன்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
ஆர்.கே.பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்.



ஆறுதல் பரிசு :
என்.ராதா,
ஒன்பதாம் வகுப்பு, இராணி மெய்யம்மை
மெட்ரிக் பள்ளி, புலியூர், கரூர் மாவட்டம்.



ஆறுதல் பரிசு :
வி. ஜெயகணேஷ்,
எட்டாம் வகுப்பு, மதுரை.



100 பவுண்ட்

அயர்லாந்தில் சூரன் என்று ஒரு பெரிய வழக்கறிஞர் இருந்தார். வழக்குகளைக் கையாள்வதில் மிகவும் வல்லவர். ஒருமுறை அவரிடம் ஏழை விவசாயி ஒருவர் "ஐயா நான் ஒருவனிடம் 100 பவுண்ட் கொடுத்திருந்தேன். ஆனால் அவனோ இப்போது தான் அதை வாங்கவே இல்லை என்று சாதிக்கிறான்" என்றார்.

அதற்கு வழக்கறிஞர், "அவனுக்கு இன்னொரு முறை 100 பவுண்ட் கொடு. ஆனால் கொடுக்கும் போது ஒரு பாதிரியாரை முன்வைத்துப் பிறகு கொடு" என்று அறிவுரை கூறினார்.

அந்த விவசாயியும் அப்படியே செய்தார். பிறகு என்ன செய்ய வேண்டும் என்று கேட்க, "இப்போது நீ சென்று அந்த 100 பவுண்டை கேள். ஆனால் தனியாகச் செல்" என்றார். விவசாயியும் கடன் கொடுத்தவனிடம் பணம் கேட்க, அவனும் பாதிரியார் முன்னிலையில் பணம் கொடுத்திருப்பதால் மறுக்க முடியாமல் 100 பவுண்டுகளைக் கொடுத்தான். திரும்பவும் வழக்கறிஞரிடம் வந்த விவசாயி, "ஐயா! இரண்டாம் முறை கொடுத்த பணம் கிடைத்து விட்டது. ஆனால் முதல் முறை கொடுத்த 100 பவுண்ட் அவனிடமே உள்ளதே" என்றார்.



அதற்கு வழக்கறிஞர், "இந்த முறை பாதிரியாரை அழைத்துச் சென்று அவர் முன்னிலையில் பணம் கேள்" என்று அறிவுரை செய்ததும் விவசாயியும் அப்படியே செய்தார். பாதிரியாருடன் வந்து பணம் கேட்ட விவசாயியைப் பார்த்து முதலில் 100 பவுண்ட் வாங்கியவன் திகைத்து விட்டான். அவன் பணம் கொடுக்க மறுத்தால் அவனைச் சந்தேகிக்கும்படி ஆகும் என்பதை உணர்ந்து தன் ஏமாற்று வித்தை பலிக்காது என்பதைப் புரிந்து விவசாயி முதலில் கொடுத்த 100 பவுண்டை கொடுத்து விட்டான். விவசாயி மகிழ்ச்சி அடைந்தார்.

— ஜி. இந்திரா.

உலக உணவு விருது



உலகெங்கும் பல்வேறு துறை விவசாய ஆராய்ச்சி வல்லுநர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முழுமூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி மனித சமுதாயத்திற்காக உணவு உற்பத்தியில் அயராது உழைக்கும் அறிஞர்களுக்கு அவர்கள் மேலும் புத்துணர்வுடன் பணியாற்ற உதவும் வகையில் வழங்கப்படும் விருதுதான் உலக உணவு விருது.

உலக உணவு விருது வருடந்தோறும் உலக உணவு தினமான அக்டோபர், 16ம் தேதி வழங்கப்படுகிறது. உணவு உற்பத்தியில் பெரும்புரட்சி செய்த 'சோல்பாஸ்' உருவச் சிலையுடன் பணமாக ரூபாய் 2,50,000 இவ்விருதுடன் வழங்கப்படுகிறது.

1970ம் ஆண்டு சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்ற டாக்டர் நார்மன் இ. பார்லேயி, விவசாயத் துறையில் புரட்சிகளைச் செய்பவர்களையும், உணவு உற்பத்தியில் பெரும் பங்கு ஆற்றும் அறிஞர்களையும் வருடந்தோறும் ஊக்குவித்து விருதுகள் வழங்க வேண்டும் என்று விரும்பினார். அவரது கனவு 1986ம் ஆண்டு நனவாகியது. அப்போதுதான் அமெரிக்காவில் உலக உணவு விருது வழங்க ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1987ம் ஆண்டு முதல் உலக உணவு விருது வழங்கப்படுகிறது. இவ் விருதைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெறுபவர் எம்.எஸ்.சுவாமிநாதன் (படம்). 1960ம் ஆண்டில் இந்தியாவில் பசுமை புரட்சியை ஏற்படுத்த இவர் கண்டுபிடித்த அதிகளவு விளைச்சலைத் தரும் கோதுமை மற்றும் அரிசி ரகங்களுக்காக இவருக்கு இவ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

உலக உணவு விருது வழங்கும் அமைப்பின் தலைமையிடம் அமெரிக்காவின் லோவா மாகாணத்தில் டெஸ்மேயின்ஸில் உள்ளது. இதன் தலைவராக ஜான் ரான் என்பவர் இருக்கிறார். இவர் 1997ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி 10,000 டாலர்கள் நன்கொடையாக வழங்கினார். இதன் விளைவாக அதுவரை 2,00,000 ரூபாயாக வழங்கப்பட்ட இவ்விருது 2,50,000 ரூபாயாக உயர்ந்தது. இவரைத் தவிர்த்து, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர், முன்னாள் உலக வங்கித் தலைவர் டாக்டர் ராபர்ட் மெக்நாமாரன் மற்றும் இவ்விருது வழங்கக் காரணமாக விளங்கிய டாக்டர் நார்மன் பார்லேயும் இவ்வமைப்பின் முக்கிய அங்கத்தினராக உள்ளனர். இவர்கள்தான் விருது பெறுபவர்களைப் பலவித தேர்வுகளுக்குப் பின்னர் தேர்ந்தெடுக்கிறார்கள்.

1987ம் ஆண்டு வழங்கப்பட்ட இவ்விருது சில காரணங்களால் மூன்று ஆண்டுகள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.


அதன்பின் பல தலைவர்களின் முயற்சிகளின் பலனாக 1990ம் ஆண்டு முதல் இவ்விருது மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.


2000வது ஆண்டிற்கான உலக உணவு விருது இந்தியாவைச் சேர்ந்த டாக்டர். சுரீந்தர் கே. வாசால்' என்பவருக்கும், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த டாக்டர். எவிங்கிலீனா வில்லிகாஸ் என்பவருக்கும் வழங்கப்பட்டது. உலக உணவு விருதைப் பெறும் முதல் பெண்மணி எவிங்கிலீனா என்பது குறிப்பிடத்தக்கது.

— கோ. வீ. இராஜேந்திரன்,
மதுரை.

பத்து ரூபாயும் மாம்பழமும்!

கதை: எஸ். சரவணன், மோகனூர்.   படம்: சேகர்




வழியில் –
மாம்பழம் எப்படி?
இந்தப் பையில் மூணு பழம் இருக்கு. 15 ரூபாய்க்கு விற்றேன். கடைசிங்கறதாலே 10 ரூபாய்க்கு எடுத்துக்க.
அப்பாடா! செல்லா நோட்டைத் தள்ளியாச்சு. அவர் நோட்டைப் பார்க்கிறதுக்குள்ளே கிளம்பிடணும்.
நல்லவேளை. பையைப் பிரிச்சு அவன் பார்க்கலே. அழுகின பழத்துக்குப் பத்து ரூபாய் கிடைச்சது என் அதிர்ஷ்டம்தான்!
சுரேஷ் வீட்டில்
சே! ஒரு பழம்கூட நல்லாயில்லையே!
ஐயோ செல்லா நோட்டு. ஏமாற்ற நினைத்த எனக்கு ஏமாற்றம்தான் கிடைச்சிருக்கு.

தஞ்சைப் பெரிய கோவில் கட்டும் பணி வேகமாக நடந்து கொண்டிருந்தது. சோழப் பேரரசர் இராசராசன் அதில் மிகுந்த ஆர்வம் கொண்டு கட்டிக் கொண்டிருந்தார்.

எப்படி வேலை நடக்கிறது என்பதை அறிய விரும்பிய அவர் வழிப்போக்கன் போல் மாறுவேடம் பூண்டார். கோயில் பணி நடக்கும் இடத்திற்கு வந்தார். அவரை அரசர் என்று யாருமே அறியவில்லை.

அப்பொழுது பெரிய பாறை ஒன்றைச் சுவரின் மேல் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். வேலையாட்கள் பலரும் ஒன்று சேர்ந்து கயிறு போட்டு இழுத்தும் அந்தப் பாறை சிறிதும் நகரவில்லை. எல்லோரும் சோர்வு அடைந்தார்கள்.

அங்கிருந்த மேற்பார்வையாளனோ, "என்ன எல்லோருமே ஏமாற்றுகிறீர்களா? இந்தப் பாறையை மேலே ஏற்ற முடியவில்லையா?" என்று கோபத்துடன் கத்திக் கொண்டிருந்தான்.

அவன் அருகில் வந்த பேரரசர், "ஐயா! நீங்களும் அவர்களுடன் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்யக் கூடாதா?" என்று கேட்டார்.

"நான் மேற்பார்வையாளன் என்பது உமக்குத் தெரியாதா?" என்று ஆணவத்துடன் கேட்டான் அவன்.

'அப்படியா?' என்ற அவர் வேலையாட்களுடன்



தானும் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்தார். ஒருவழியாகப் பாறை மேலே ஏற்றப்பட்டது.

பெருஞ் செல்வந்தரைப் போலக் காட்சி அளித்த அவர் வேலையாட்களுடன் சேர்ந்து வேலை செய்ததைக் கண்டு மேற்பார்வையாளன் வியப்பு அடைந்தான்.

மறுநாள் பேரரசரிடமிருந்து அந்த மேற்பார்வையாளனுக்கு ஓர் ஓலை வந்தது. அதில், 'கோயில் திருப்பணிக்கு ஆட்கள் போதவில்லையானால் உடனே அரசருக்குச் சொல்லி அனுப்பு. நேற்று வேலை செய்ததைப் போல அவர் வந்து வேலை 'செய்வார்' என்று எழுதியிருந்தது.

இதைப் பார்த்த மேற்பார்வையாளனின் ஆணவம் ஒழிந்தது. மற்ற வேலையாட்களுடன் சேர்ந்து உழைத்து அவர்களுக்கு ஊக்கம் தந்தான்.



பறவைகளிடம் அன்பு

மேற்கு வங்க ஆளுநர்-மாளிகையின் ஒரு பகுதியில் புறாக்கள் சூழ்ந்து தொந்தரவு அதிகரித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் அமைச்சர் ஒருவருடன் ஆளுநர் ராஜாஜி பேசிக் கொண்டிருந்தபோது "அவற்றைச் சுட்டுத் தள்ளி விடலாம்'' என்று ஆலோசனை கூறினார் அமைச்சர்.


''சிவில் பிரச்னைக்கு இப்படி ஒரு மிலிட்டரி தீர்வா? வேண்டாம்'' என்று மறுத்து விட்டார் ராஜாஜி.

பிறகு புறா பிடிப்பவர் ஒருவரை வரவழைத்து புறாக்களைப் பிடித்து வெளியே கொண்டு போய்விட ஏற்பாடு செய்தனர். அதிலும் பலன் ஏற்படவில்லை.

"அடுத்தபடி என்ன செய்யலாம்?" என்று ராஜாஜியிடம் கேட்டார் செயலாளர்.

"இதுவரை அவற்றை வெளியேற்ற நாம் செய்த முயற்சிகளை எல்லாம் அவை முறியடித்து விட்டன. கவர்னர் ஜெனரலுக்குக் கருணை மனு அனுப்ப இந்தப் பறவைகளால் இயலாது. எனவே அவை எப்போதும் போல் இருந்துவிட்டுப் போகட்டும். அந்த இடங்களை மட்டும் அவ்வப்போது நன்றாகச் சுத்தம் செய்யச் சொல்லுங்கள்'' என்றார் ராஜாஜி.

தொகுப்பு: **சு. கண்ணகி, மிட்டூர்.**



அழகான பறவை!

மயில் மிகவும் அழகான பறவை. பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைவரும் அதன் அழகில் மயங்குவதுண்டு. படிக்கும் மாணவர்கள் தங்கள் புத்தகங்களில் கண்டிப்பாக மயில் இறகு வைத்திருப்பார்கள். அது குட்டி போட்டு நிறைய மயில் இறகு உருவாகும் என்பது அவர்களின் நம்பிக்கை! ஆனால் மயில் இறகு, எத்தனை ஆண்டுகளானாலும் குட்டி போடாது.

மயில் ஒரு வண்ணமயமான பறவை. அதன் உடலும் இறகுகளும் கண்கவர் வண்ணங்களால் பார்ப்பவர்களை ஈர்க்கும். மயிலின் தலையில் கருமையும், நீலப்பச்சையும் கலந்த அழகிய குஞ்சம் உண்டு. தலையும் கழுத்தும் பளபளப்பான நீலநிறமாக இருக்கும். உடலில் நீலம், பச்சை, கறுப்பு, இளஞ்சிவப்பு போன்ற பல நிறங்கள் கலந்து இருக்கும். பெண் மயிலைக் காட்டிலும் ஆண்

எஸ். சுஜாதா

மயிலே அழகானது. அதே போல் மயில் என்றதும் நினைவிற்கு வரும் தோகையும் பெண் மயிலுக்குக் கிடையாது.

இந்தத் தோகை ஆண் மயிலின் வால் அல்ல. முதுகிலிருந்து நீண்டு வளரும் இறகுகள்தான். ஒவ்வொரு இறகின் நுனியிலும் சிறிய வட்டம் இருக்கும். இதைக் கண் என்று அழைப்பார்கள். ஆண் மயில் மகிழ்ச்சி அடையும் போது இந்த அழகிய தோகையை விசிறி போல் விரித்து ஆடும். மற்ற நேரங்களில் இறகு சுருங்கி இருக்கும்.



இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா ஆகிய நாடுகளில் மயில் வாழ்கிறது. எனினும் இந்தியாவில்தான் இது அதிகமாகக் காணப்படுகிறது.



உலகின் பல நாடுகளில் மயில்கள் பூங்காக்களிலும், மிருகக்காட்சி சாலைகளிலும் வளர்க்கப்படுகின்றன. இந்திய புராணங்களில் மயிலுக்கு முக்கியமான இடம் உண்டு. முருகனின் வாகனம் கூட இந்த மயில்தான்.

அடர்ந்த புதர்க் காடுகள் மற்றும் மலையடிவாரங்களில் மயில்கள் சிறு கூட்டமாக வசிக்கின்றன.

தானியங்கள், பூச்சி, பல்லி, சிறு பாம்பு முதலியன இவற்றின் உணவு. இவற்றிற்குப் பார்வை மிகவும் கூர்மையானது. பகைவர்களின் வருகையைத் தொலைவிலிருந்தே கண்டுகொண்டு ஓடி ஒளிந்து கொள்ளும்.

மயில்களால் அதிக உயரம் பறக்க முடியாது. ஆனால் வேகமாக ஓட முடியும். பகலெல்லாம் அலைந்து திரிந்து உணவு தேடி விட்டு, இரவில் உயர்ந்த மரக்கிளைகளில் தங்கி ஓய்வெடுக்கும். நீண்ட ஓசையிட்டு அகவக்கூடியது.

மயில்களில் பல இனங்கள் உள்ளன. அவற்றில் முற்றிலும் வெண்மையான மயில்களும் உண்டு.

அழகான தோகையே மயிலுக்குப் பகையாகி விட்டது. தோகைக்காக வேட்டையாடுவதால் இதன் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வேட்டையாடுவதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. நமது தேசியப் பறவையைக் காப்பது நமது கடமையல்லவா?




செய்து பார்


காசு என்ன ஆகும்?

ஒரு கண்ணாடி டம்ளரை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மேல் தபால் அட்டையை வைக்கவும். அட்டையின் நடுவில் 50 பைசா அல்லது 5 ரூபாய் நாணயம் ஒன்றை வைத்து விடுங்கள். இப்பொழுது அட்டையின் ஓரத்தைச் சுண்டிவிட்டால் என்ன ஆகும்? அட்டையும் நாணயமும் பறந்து சென்று விழும் என்றுதானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. அட்டை மட்டுமே பறக்கும். நாணயம் கண்ணாடி டம்ளருக்குள் விழுந்து விடும்.

இது எப்படி? அட்டையைச் சுண்டும்போது நாம் கொடுக்கும் விசையானது அட்டையை மட்டுமே செலுத்துகிறது. நாணயத்தின் மேல் விசை செயல்படுவதில்லை. எனவே நாணயம் தாங்கிக் கொள்ள அட்டை இல்லாத காரணத்தால் டம்ளருக்குள் விழுந்து விடுகிறது.



ஒரு நாளில்...




- உலகின் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனமான இந்திய ரயில்வே பணியில், ஒரு நாளுக்கு 1.6 மில்லியன் ஊழியர்கள் பணி புரிய ஆயத்தமாகின்றனர்.
- இலங்கையில் சராசரியாக ஒவ்வொரு நாளும் இரண்டு மனிதர்கள் கொடிய விஷப் பாம்புக் கடியால் இறக்கின்றனர்.







- உலகில் ஒரு நாளைக்கு 52,000 டன்கள் பருத்தி அறுவடையாகிறது. 207 மில்லியன் டி-ஷர்ட்கள் தயாரிக்க இந்த அளவு பருத்திப் போதுமானது.



- உலகில் ஒரு நாளில் உண்ணப்படும் கோதுமையைக் கொண்டு அமெரிக்காவின் 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' எடைக்கு மூன்று மடங்கான ரொட்டியைத் தயாரிக்கலாம்.

– சங்கரகிருஷ்ணன், கோவை.

குட்டி உலகம்!

ஹாலந்து நாட்டின் முக்கிய நகரம் ஆம்ஸ்டர்டேம். அங்கிருந்து ஒரு மணி நேர கார் பயணத்தில் மதுரோடம் என்ற சிற்றூருக்குச் சென்று விடலாம். இங்கு வருடம் முழுவதும் உல்லாசப் பயணிகள் வந்து செல்கின்றனர். அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா?

இங்கு அழகிய குட்டி நகரம் அமைக்கப்பட்டுள்ளது. ஹாலந்து நாட்டின் அனைத்து பிரபலமான இடங்களையும் இங்கு குட்டியாகக் கண்டுகளிக்கலாம். அந்த நாட்டில் உள்ள அழகிய மாளிகைகள், வீடுகள், கட்டடங்கள், காற்று ஆலைகள், வங்கிகள், பாலங்கள், ரயில்வே ஸ்டேஷன், சர்ச், ரோட்டர் டேம், நகரின் அழகிய துறைமுகம், கால்வாய்கள், படகுகள், கப்பல்கள், விமானதளம், விமானங்கள், நெடுஞ்சாலைகள், ரயில், கார் என அனைத்தையும் இங்கு குட்டியாகக் காணலாம்.

1:25 என்ற அளவில் கனகச்சிதமாக, நிஜகட்டடம் போன்றே அதே அமைப்பில் அதே வண்ணத்தில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு நாம் உயரம். நகரமோ சிறியது. ஹாலந்து நாட்டின் முன்னேற்றம், சரித்திரம், தொழில் முன்னேற்றம் உட்பட அனைத்து அம்சங்களையும் இங்கு வடிவமைத்துள்ளனர். ஹாலந்து காற்றாலைகளுக்குப் பெயர் பெற்ற இடம். அந்தக் காற்றாலைகளுக்கு இங்கு சிறப்பிடம் உண்டு.

மணல் உலகம் என ஒரு தனிப் பகுதி உண்டு. ஹாலந்து நாடு கடலினால் பல கஷ்டங்களையும் பல லாபங்களையும் அடைந்த நாடு! அதன் பாதிப்பையும் நன்மைகளையும் இங்கு தரிசிக்கலாம்!



இந்தக் குட்டி உலகத்தைக் கல், உலோகம் மற்றும் மண் ஆகியவற்றால் அமைத்துள்ளனர்.

குழந்தைகளுடன் சென்று கண்டுகளிக்க வேண்டிய வித்தியாசமான இடம் இது. உங்களுக்குத் தெரியுமா? ஹாலந்துக்கு நெதர்லாந்து என மற்றொரு பெயரும் உண்டு!

— வி.ஆர். கிருத்திகா, திருச்சி.

உங்களுடன் ஒரு நிமிடம்

இருபத்தோராம் நூற்றாண்டை வரவேற்ற பிறகு, பொங்கல் திருநாளையும் சிறப்பாகக் கொண்டாடியிருப்பீர்கள். பள்ளிக்கூடத்திலும் ஸ்போர்ட்ஸ், ஆண்டு விழா எல்லாம் நடந்து முடிந்திருக்கும். இனி பரீட்சையை எதிர்நோக்கி படிக்க வேண்டியதுதான்.

ஆறாம் வகுப்பு மாணவன் அழகிரி அப்பாவிடம் போய் சந்தேகம் கேட்டான்; விஞ்ஞானப் பாடத்தில். வைத்தாரே, ஒரு அறை முதுகில்!



"ஏண்டா! உனக்கு வகுப்பாசிரியர் நாலு நாளைக்கு முன்னால் சொல்லிக் கொடுத்ததை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியலை; நான் படித்து நாற்பது வருஷமாச்சு, எனக்கு எப்படிடா ஞாபகம் இருக்கும்?'' என்று கேட்டாரே பார்க்கலாம்!

இப்படித்தான் சிலருக்குத் தங்கள் இயலாமையை ஒப்புக் கொள்ளவே மனம் வராது! ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நழுவுவார்கள். பல மாணவர்களும்கூட தங்களுக்குத் தெரியவில்லை அல்லது புரியவில்லை என்பதை ஒப்புக்கொள்ள மறுத்து உருப் போட்டுக் கொண்டு போவார்கள். பரீட்சைக்கு மணி அடித்ததும் டென்ஷனில் மறந்து போகும். தவிப்பார்கள்.

தொடர் வெற்றிகளுக்கு வாழ்த்துகள்!


எனவேதான் புரிந்துகொண்டு படிப்பது அவசியம். அதைவிட முக்கியம், புரியவில்லை என்பதைத் தயங்காமல் ஒப்புக் கொள்வதும், புரிந்து கொள்ள முயற்சியை மேற்கொள்வதும். உங்கள் அண்ணன், நண்பன் அல்லது வகுப்பாசிரியரை நயமாகக் கேட்டால், ஒரு தரத்துக்கு இரண்டு தடவையாகக்கூட விளக்கிப் புரிய வைப்பார்கள். புரிந்துவிட்டால் மறக்காது. சுலபமாகப் பரீட்சை எழுதலாம்.


விசுவநாதன் ஆனந்தின் உலக சாதனையை எண்ணிப் பாருங்கள்! அதற்கு அடிப்படை, செஸ் ஆட்டத்தின் நுணுக்கங்களை அவர் துல்லியமாகப் புரிந்து கொண்டதுதான். அதைப் போல நீங்களும் புரிந்துகொண்டு படியுங்கள். அப்போதுதான் டெஸ்ட் மாட்ச்களில் ஆஸ்திரேலியர் பதினாலு தொடர் வெற்றிகளைப் பெற்று உலக சாதனை படைத்தது போல, நீங்களும் ஒவ்வொரு வகுப்பிலும் இறுதிப் பரீட்சையில் நிறைய மதிப்பெண்கள் பெற்றுத் தேறி பெற்றோரை மகிழ்விக்கலாம்.

– ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





''பயங்கர சத்தம் போட்டுப் பேசறானே உன் நண்பன், அவன் பேரு என்ன?''


'' 'மை'க்கேல்!''


- பாலசுப்ரமணியன், சென்னை.

பிருந்தாவனம்

விடை : 1.யானைவால், 2.தந்தம், 3.மனிதனின் வாய், 4.கை, 5.ஸ்டியரிங், 6.சக்கரம்.

வண்ணம் தீட்டுங்கள்!






1 லிருந்து 10 வரை உள்ள எண்களில் விடுபட்ட எண் எது?

விடை : 6

என்ன ஒரு பாசப் பிணைப்பு!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

